21.11.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கடற்பாசி கிலோ ரூ.15 : மீனவ பெண்கள் மகிழ்ச்சி



ராமநாதபுரம்:கடற்பாசியை கிலோ ரூ.15 க்கு கொள்முதல் செய்வதால் ராமநாதபுரம் மாவட்ட மீனவ பெண்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கடற்பாசியில் மருந்துகள், ஆடை சாயம், சாக்லேட், ஐஸ்கிரீம், பற்பசை, விண்வெளி வீரருக்கான உணவு போன்ற பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. பாக்ஜலசந்தி, மன்னார் வளைகுடா பகுதிகளில் கஞ்சிப்பாசி, பக்கடாபாசி, கட்டக்கோரை, மரிக்கொழுந்து ஆகிய 4 வகை பாசிகள் அதிகளவில் காணப்படுகின்றன. இவை கடலில் 20 அடி ஆழத்தில் கிடைக்கும். இவற்றை ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த 5 ஆயிரம் மீனவ பெண்கள் சேகரிக்கின்றனர். இந்த பகுதியில் ஆண்டிற்கு 900 டன் கடற்பாசி சேகரிக்கப்படுகின்றன.தற்போது தேவை அதிகரித்துள்ளதால் சில மாதங்களுக்கு முன் கிலோ ரூ.10 க்கு கொள்முதல் செய்யப்பட்ட கடற்பாசி ரூ.15 ஆக உயர்ந்துள்ளது. இதனால் மீனவ பெண்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.புதுமாயகுளம் மாரியம்மாள்

கூறியதாவது: காலை 6 முதல் 10 மணி வரை கடலில் மூழ்கி பாசி எடுப்போம். ஒருவர் தினமும் குறைந்தபட்சம் 20 கிலோ சேகரிக்கிறோம். அவற்றை வெயிலில் நன்கு காய வைப்போம். வியாபாரிகள் கிலோ ரூ.15 க்கு கொள்முதல் செய்கின்றனர். மாதம் ரூ.10 ஆயிரம் முதல் ரூ.12 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கும், என்றார்.

**தமிழக கன மழைக்கு 'எல் நினோ' காரணமா?**



'சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் பெய்த கன மழைக்கு, 'எல் நினோ' என்ற பருவ நிலை மாற்றம் காரணமாக இருக்கலாம்' என, வானிலை ஆய்வு மைய வட்டாரங்கள் கூறுகின்றன.

**இது குறித்து வானிலை ஆய்வு மைய வட்டாரங்கள் கூறியதாவது:**தமிழகத்தில், அக்டோபர் முதல் டிசம்பர் வரை வட கிழக்கு பருவ மழை சராசரியாக, 44 செ.மீட்டர் பெய்யும். நடப்பு ஆண்டில், நவ.,1 முதல், 18 வரை, சராசரியாக, 3.7 செ.மீ., மழை பெய்ய வேண்டும். ஆனால், 9.3 செ.மீ., மழை பெய்துள்ளது. இது, சராசரியை விட, 153 சதவீதம் அதிகம்.அதேநேரத்தில், இந்த காலகட்டத்தில், சென்னையில் சராசரி மழை, 10 செ.மீ., - பெய்தது, 44 செ.மீ., - இது, 329 சதவீதம் அதிகம்; காஞ்சிபுரத்தில் சராசரி மழை, 6 செ.மீ., - பெய்தது, 45 செ.மீ., - இது, 656 சதவீதம் அதிகம்; கடலூரில் சராசரி மழை, 7 செ.மீ., - பெய்தது, 13 செ.மீ., - இது, 93 சதவீதம் கூடுதலாகும். மழை கூடுதலாக பெய்ய, வங்கக் கடல்

மற்றும் அரபிக் கடலில் புயல் உருவாகவில்லை. பசிபிக் கடல் பரப்பில், அக்டோபரில் நிலவும் வெப்பத்தின் அளவு, சராசரியை விட கூடுதலாக இருக்கும்போது, அதன் மீது கடல் காற்று மோதி, கடும் வெப்பத்தை குளிராக மாற்றுகிறது.இந்த பருவ நிலை மாற்றம், கிறிஸ்துமஸ் பண்டிகை காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதால், கிறிஸ்துவின் பெயருடன் நினைவு கூர்ந்து, எல் நினோ என, ஸ்பெயின் மொழியில் பெயரிடப்பட்டு உள்ளது. இரண்டு முதல், ஒன்பது ஆண்டுகளுக்கு, ஒருமுறை, பசிபிக் கடல் பகுதியில் இதுபோன்ற பருவநிலை மாற்றம் ஏற்படுவது வழக்கம். அப்படி மாற்றம் ஏற்படும்போது, அந்த ஆண்டை, எல் நினோ ஆண்டு என, அழைக்கின்றனர்.'நடப்பு ஆண்டில், பசிபிக் கடலில், சராசரி வெப்பத்தை விட, 2 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் கூடுதலாக பதிவாகி உள்ளது' என, ஐக்கிய நாடுகளின் கடல் மற்றும் மேற்பரப்பு நிர்வாகம் தெரிவிக்கிறது. எல் நினோ மூலம், குறைந்த காற்று அழுத்த தாழ்வு, புயல் போன்றவை பருவ மழைக்கு முன் அல்லது பருவமழைக்கு பின் ஏற்படும்.

எல் நினோ காலத்தில் வங்கக் கடலில், மேற்கு நோக்கி நகரும் காற்று திசை மாறி கிழக்கு நோக்கி நகரும். தற்போது, தமிழகம், ஆந்திராவில் பெய்த கன மழைக்கு, பல காரணிகளை கணித்துள்ளோம். இதில், எல் நினோ ஒரு காரணியாக இருக்கலாம்.இவ்வாறு வானிலை மைய வட்டாரங்கள் கூறின.

**'எல் நினோ' கணிப்பு சரியா:**

சென்னை வானிலை ஆய்வு மைய முன்னாள் இயக்குனர் ஒய்.இ.ஏ.ராஜ் கூறியதாவது:பசிபிக் கடலின் மேற்பரப்பில் இயல்பை விட கூடுதலாக பதிவாகும் வெப்ப நிலையால், எல் நினோ ஏற்படுகிறது. இது, உலகம் தழுவிய பருவ நிலை. நடப்பு ஆண்டில், இதுபோன்ற கூடுதல் வெப்பநிலை பதிவு உள்ளது. எல் நினோ இருக்கும்போது, இந்தியாவில், தென் மேற்கு பருவமழை குறைவாகவும், வட கிழக்கு பருவ மழை கூடுதலாகவும் இருக்கும் என, சொன்னாலும், பல ஆண்டுகள், எல் நினோ இருந்த போது, வட கிழக்கு பருவ மழை பொய்த்துள்ளது.எனவே, வட கிழக்கு பருவ மழை கூடுதலாக பெய்ய, எல்

நினோ ஒரு காரணியே தவிர, அதுவே முழு காரணம் என, சொல்ல முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

**கால்நடை வளர்ப்புக்கு விலை குறைவான புதிய உபகரணங்கள்**



வீடு மற்றும் பண்ணைகளில் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் பறவை இனங்களின் நலன் கருதி, குறைந்த விலையிலான உபகரணங்களை, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. இவை விரைவில், மாநிலம் முழுவதும் விற்பனைக்கு வர உள்ளன.

ஆடு, மாடு, பன்றி, குதிரை, கோழி மற்றும் முயல்கள், சொந்த உபயோகத்துக்காகவும், வருமானத்துக்காகவும், வீடுகளிலும், பண்ணைகளிலும் வளர்க்கப்படுகின்றன.

குளிர் மற்றும் வெயில் காலங்களில் இவற்றை பராமரிப்பதில் பல சிரமங்கள் உள்ளன. இதை கருத்தில் கொண்டு நீண்ட ஆய்வுக்குப் பின், புதிய உபகரணங்களை சென்னை, மாதவரத்தில் உள்ள கால்நடை பல்கலைக் கழகத்தினர் உருவாக்கி உள்ளனர்.

இது தொடர்பாக, பல்கலை துணைவேந்தர் திலகர் மற்றும் மருத்துவர்கள் கூறியதாவது:

விவசாயிகள் மற்றும் பண்ணை உரிமையாளர்களுக்கு தேவையான உபகரணங்களை தயாரிக்க, பிரத்யேகமாக தொழில்நுட்ப மையம் திறக்கப்பட்டுள்ளது. இங்கு தற்போது, 16 உபகரணங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

*ஆடுகளின் உடலில், உண்ணி உள்ளிட்ட பூச்சிகள் தாக்கி பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதற்காக, கால்நடை மருத்துவமனைகளில், மருந்து குளியல் சிகிச்சை அளிக்கப்பட்டாலும், அனைவரும் அதை பயன்படுத்துவதில்லை. இதனால், ஆடுகள் நோய்வாய்பட்டு உயிரிழக்கின்றன. எனவே, வீடு மற்றும் பண்ணைகளில் ஆடுகளுக்கு, மருத்துவக் குளியல் அளிக்க, நகர்த்தக் கூடிய குளியல் தொட்டி உருவாக்கப்பட்டுள்ளது. இதில், ஆடுகள் ஏறி, இறங்க படிகள் உண்டு; அதிக இடம் தேவைப்படாது

* புதிதாக பிறக்கும் ஆட்டுக்குட்டிகள், சளித்தொல்லையால் உயிரிழப்பது அதிகம். அவற்றை காக்க, கதகதப்பான குளிர் தடுப்பான் கூண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது

* முயல்களுக்கு எப்போதும் சுத்தமான குடிநீர் வழங்க, தானியங்கி தண்ணீர் தொட்டி

* ஆடுகளை திறந்தவெளியில் விடாமல் கொட்டகைக்குள்ளேயே வளர்க்கும் கொட்டில்

* மாட்டுச் சாணம், விரயமான பசுந்தீவனங்கள் போன்றவற்றை வைத்து எரிபொருள் தயாரிக்க சாண வரட்டி சாதனம்

* ஆயிரம் லிட்டர் நீரை, 20 நிமிடத்தில் தெளிக்க உதவும், நகரும் பாசன பன்முக நீர் தெளிப்பான்

* ஆடு, மாடுகளை ஏற்றி, இறக்குவது மிகவும் கடினமான பணி. அதனால், அவற்றை எளிதாக ஏற்றி இறக்குவதற்கான உபகரணம். இப்படி, குறைந்த விலையில் பல உபகரணங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றை சோதனை முறையில், விவசாய கூட்டுறவு சங்கங்களில் காண்பித்து, வரவேற்பை பொறுத்து, தேவையான சாதனங்கள் அதிக அளவில் தயாரிக்கப்படும். விரைவில், விலை நிர்ணயிக்கப்பட்டு, உழவர் திருநாளில் இந்த உபகரணங்கள் விற்பனைக்கு வரும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## 10 ஆயிரம் கனஅடி நீர் வரத்து136 அடியை தாண்டும் பெரியாறு

தேனி:முல்லை பெரியாறு அணையில் பலத்த மழை பெய்து வருவதால், நீர் வரத்து விநாடிக்கு 10 ஆயிரம் கனஅடியை எட்டி உள்ளதாகவும், நீர் மட்டம்

இன்று 136 அடியை தாண்டி விடும் எனவும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.கடந்த 3 நாட்களாக தேனி மற்றும் இடுக்கி மாவட்டத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. முல்லை பெரியாறு அணையில் நேற்று காலை 8 மணி வரை 56 மி.மீ.,யும், தேக்கடியில் 49 மி.மீ.,யும் மழை பெய்துள்ளது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 4,650 கனஅடியாக இருந்த நீர் வரத்து மாலை 5 மணிக்கு 10 ஆயிரம் கனஅடியை எட்டியது. அணை நீர் மட்டம் 134.20 அடியை தாண்டியது. மழை தொடர்ந்து நீடிப்பதால் இன்று நீர் மட்டம் 136 அடியை தாண்டி விடும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.வைகை அணைக்கு நேற்று காலை நிலவரப்படி விநாடிக்கு 6,102 கனஅடி நீர் வரத்து இருந்தது. பகல் முழுவதும் மழை பெய்ததாலும், கொட்டகுடி ஆறு, முல்லை பெரியாறு, வராக நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாலும், நீர் வரத்து மாலையில் 7,500 கன அடியாக அதிகரித்தது. நீர் மட்டம் 61.58 அடியாக உயர்ந்துள்ளது.கடமலைக்குண்டு பகுதியில் பெய்து வரும் கன மழையால் 'மூல'வைகையில் வெள்ள பெருக்கு ஏற்பட்டு, செல்வராஜபுரம், வண்டியூர், தண்டியக்குளம், காந்திக்கிராமம், முத்துநகர் ஆகிய மலைகிராமங்கள் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது.

வேளாண் பட்டம் இருந்தால்தான் இனி உரக்கடை லைசென்ஸ்: மத்திய வேளாண் அமைச்சகம் உத்தரவு

கம்பம்: பி.எஸ்சி., 'அக்ரி' பட்டம் பெற்றிருந்தால் மட்டுமே இனி உரக்கடை வைக்க லைசென்ஸ் பெற முடியும், என்று மத்திய வேளாண் அமைச்சகம் புதிய உத்தரவு பிறப்பித்துள்ளது.

மத்திய அரசு வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு பெரிய அளவில் மானியம் வழங்கி வருகிறது. ஆனாலும் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளில் போலிகள் நடமாட்டம் அதிகரித்து விட்டதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. இதை தடுக்க மத்திய அரசு முதல்கட்ட நடவடிக்கையாக உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்து விற்பனையில் பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்க துவங்கியுள்ளது.மருந்துக்கடை நடத்துபவர்கள் பி.பார்மசி பட்டம் பெற்று இருக்க வேண்டும் என்ற விதிமுறையை இந்திய மருத்துவ கழகம் மருத்துவத்துறையில் அமல்படுத்தி

இருப்பது போல், இனிமேல் உரக்கடை வைக்க லைசென்ஸ் பெற வேண்டும் என்றால், அதற்கு விண்ணப்பிப்பவர் கண்டிப்பாக பி.எஸ்சி., அக்ரி பட்டம் பெற்று இருக்க வேண்டும், என வேளாண்மைத் துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதன்படி, பி.எஸ்சி., அக்ரி அல்லது வேளாண் பட்டயப்படிப்பு அல்லது பி.எஸ்சி. கெமிஸ்ட்ரி பட்டம் பெற்றவர்கள் மட்டுமே உரக்கடை லைசென்ஸ் கேட்டு விண்ணப்பிக்க வேண்டும். மற்றவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்பட மாட்டாது.

மத்திய அரசின் இந்த உத்தரவுப்படி ஏற்கனவே உரக்கடை வைத்திருப்பவர்களுக்கு புதுப்பித்தலுக்கு எந்த பிரச்னை இல்லை. அவர்களின் லைசென்ஸ் வழக்கம் போல செல்லுபடியாகும். இனிவரும் காலங்களில் புதிதாக லைசென்ஸ் பெறுவதற்கு மட்டுமே இந்த புதிய உத்தரவு கடைப்பிடிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. மத்திய அரசின் இந்த உத்தரவால் உரக்கடை உரிமையாளர்களையும், உரக்கம்பெனிகளையும் அதிர்ச்சி அடைந்துள்ளன.

**காய்கறி உற்பத்திக்கு இஸ்ரேல் தொழில்நுட்பம்: தூதரக வல்லுனர் தகவல்**



ெரட்டியார்சத்திரம்: "இந்தியாவின் மக்கள் தொகை அதிகரிப்பிற்கேற்ப உணவு, காய்கறி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதற்கான நுட்பங்களை இஸ்ரேல் வழங்கும்," என, இந்தியாவுக்கான இஸ்ரேல் துாதரக அதிகாரி தெரிவித்தார்.திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் தோட்டக்கலை மையத்தில், 13.33 ஏக்கர் பரப்பில் இந்தோ- - இஸ்ரேல் நாடுகளின் கூட்டு

நுட்பத்தில் காய்கனி உற்பத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இஸ்ரேல் தூதரக மைய வல்லுனர்கள், நேற்று ரெட்டியார்சத்திரம் தோட்டக்கலை மையம் வந்தனர். இஸ்ரேல் காய்கனி தொழில் நுட்ப வல்லுனர்கள் டோ ஷெஜிவ் ஸ்டீபன்பர்க், ஆலன்கில் ஆகியோர் நேற்று ஆய்வு செய்தனர். குறைந்தளவு தண்ணீரில் பசுமைக்குடில் முறை,திறந்தவெளி சாகுபடியில் தக்காளி, வெண்டை உள்ளிட்ட காய்கறி உற்பத்தி நுட்பங்களை செயல்படுத்தும் முறைகள் குறித்து கேட்டறிந்தனர். இவற்றின் பராமரிப்பு நிலை, பருவநிலையில் ஏற்படும் தாக்கத்தை தவிர்ப்பது தொடர்பான உத்திகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினர்.

வல்லுனர் டோ ஷெஜிவ் ஸ்டீபன்பர்க் கூறுகையில், “புதிய தொழில்நுட்பம் மூலம் வீரியமிக்க விதை, காய்கறி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். விரைவில் டில்லியில் நடைபெற உள்ள இரு நாடுகளின் கூட்டு நுட்பங்கள் குறித்த மாநாட்டில், அதிகாரிகள் பங்கேற்க வேண்டும். அதில் கிடைக்கும் நுட்பங்களை, இங்குள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் தெரிவிக்க வேண்டும்.

இந்தியாவில் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, உணவு, காய்கறி தேவையும் மிக அதிகமாக உயரும். இதனை சமாளிக்கும் வகையில், உணவுப்பொருள் உற்பத்தியை அதிகரிக்கச்செய்ய வேண்டும். இதற்கு தேவையான நுட்பங்களை இஸ்ரேல் வழங்கும். தீவிரவாதத்தை கட்டுப்படுத்துவதில், அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்,” என்றார். தோட்டக்கலை இணை இயக்குனர் ராஜாமுகமது, துணை இயக்குனர் ராமநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**உழைத்து வாழ வேண்டும்; பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே!**



**தேனி:** நம்மில் சிலர் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தாலும், முதுமை காரணமாக உழைப்பிற்கு ஓய்வு கொடுக்க வேண்டிய காலத்திலும் அன்றாடம் உழைத்து வாழவே விரும்புகின்றனர். இதற்கு தேனியை சேர்ந்த மூதாட்டிகள் சிலர் உதாரணமாக திகழ்கிறார்கள். பழனிச்செட்டிபட்டியை சேர்ந்த லீலாவதி, வீரம்மாள், பொன்னம்மாள் என்ற இந்த மூதாட்டிகள் தினமும் காடு, மேடு, மலை என அலைந்து மூலிகை செடி சேரிப்பில் ஈடுபடுகின்றனர். கடந்த 15 ஆண்டுகளாக இவர்கள் தினமும் அதிகாலையிலேயே ஆளுக்கு ஒரு திசையில் சென்று மூலிகைகளை சேகரித்து வந்து விற்பதை தொழிலாக செய்து வருகின்றனர்.

மூலிகையின் மகத்துவம் தெரியாத பலருக்கு அந்த செடிகள் கூட ஏதோ புல் போலதான் தெரியும். ஆனால், இந்த மூதாட்டிகள் செடிகளை பார்த்த நொடியில் மூலிகையின் பெயரை குறிப்பிட்டு, இது என்ன வியாதிக்கு பயன்படும். இதன் சிறப்பு என்ன என்பதை கூறிவிடுகின்றனர். நாள் முழுவதும் சேகரிக்கும் மூலிகை செடிகளை தேனி சித்த மருத்துவ கடைகளுக்கு கொண்டு வந்து கிலோ கணக்கில் விற்கின்றனர்.

**மூதாட்டி லீலாவதி கூறுகையில்,** ""15 ஆண்டுகளில் வேலை இல்லை என ஒருநாளும் வீட்டில் முடங்கியது இல்லை. தற்போது நல்ல மழை பெய்துள்ளதால் மூலிகை செடிகள் ஏராளமாக வளர்ந்துள்ளன. ஓரிதழ் தாமரை, நெறிஞ்சி முள், வல்லாரை, மொசு மொசுக்கை உள்ளிட்ட மூலிகைகள் கிலோ ரூ.50க்கும், ஆவாரம் பூ, துளசி, சாரணத்தி வேர் போன்ற சில வகை மூலிகைகள் ரூ.25க்கும் விலை போகிறது. தினமும் உழைப்புக்கு ஏற்ற கூலி கிடைக்கும்.

நாங்கள் பறித்து செல்லும் மூலிகை பலரின் நோய் தீர்க்க பயன்படுகிறதே என்பதை நினைக்கும்போது, எங்களுக்கு உள்ளார்ந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது," என்றனர்.

**24-ம் தேதி முதல் மழை குறைய வாய்ப்பு**

சென்னை: வரும் செவ்வாய்கிழமை (24-ம் தேதி )முதல் தமிழகத்தில் மழை பெய்யும் வாய்ப்பு குறையும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து ஆய்வு மையம் வெளியிடுள்ள் செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: லட்சத்தீவு பகுதியில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழகத்தில் இன்று மழை பெய்ய கூடும். மேலும் தமிழகத்தின் சராசரி மழை அளவான 44செ.மீ மழை அளவில் தற்போது வரையில் 39.6 செ.மீ அளவு வரை பெய்துள்ளது. தொடர்ந்து வரும் 24-ம் தேதி முதல் மழை பெய்வதற்கான வாய்ப்புகள் படிப்படியாக குறையும் என அதன் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**கன மழைக்கு இன்று வாய்ப்பு**

சென்னை : 'அரபிக் கடலில் நிலைகொண்டுள்ள காற்று அழுத்த தாழ்வு நீடிப்பதால், தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்கு மாவட்டங்களில், இன்று கன மழை பெய்யும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.மைய இயக்குனர் ரமணன் நேற்று கூறியதாவது:லட்சத் தீவு கடல் பகுதியில், உருவான காற்று அழுத்த தாழ்வு அதே இடத்தில் நீடிக்கிறது. இதனால், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள கோவை, நீலகிரி, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களிலும், சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களிலும் மழை நீடிக்கும்.சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; ஒரு சில இடங்களில் கன மழை பெய்யும். நேற்று காலை, 8:30 மணி வரை, தமிழகத்தில், அதிகபட்சமாக நீலகிரியில், 13; திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில், 12 செ.மீ., மழை பெய்துள்ளது. தமிழகத்தில், நான்கு நாட்களுக்கு மழை தொடரும்.இவ்வாறு அவர் கூறினார்.

**காய்கிறது ! : முதுகுளத்தூர் பகுதிகளில் பயிர்கள்.... : போதிய மழை இல்லாததால் விவசாயிகள் கவலை**

முதுகுளத்தூர்: முதுகுளத்தூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் போதிய மழை இல்லாததால் சாகுபடி செய்துள்ள விவசாய பயிர்கள் காய்கின்றன. இதனால் விவசாயிகள் கவலையடைந்து உள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை ஒவ்வொரு ஆண்டும் செப்., துவங்கி டிச., வரை பெய்வது வழக்கம். அதிலும் அக்., 15க்கு மேல் நவ., 30 வரை மழை பொழிவு அதிகமாக இருக்கும். இம்மழையை நம்பி பயிர் சாகுபடியை விவசாயிகள் துவக்குவர். வழக்கத்துக்கு மாறாக இந்தாண்டு அக்., முதல் வாரத்தில் துவங்கிய பருவமழை தொடர்ந்து நான்கு நாட்கள் சாரல் மழையும், அவ்வப்போது மிதமான மழையும் பெய்தது. நேற்றுமுன்தினம் முதல் மழை ஓய்ந்து வெயில் வெளுத்து வாங்குகிறது. இதனால் முதுகுளத்தூர், கமுதி சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் அரையடி தண்ணீர் கூட தேங்கவில்லை. பருவமழை பெய்யத் தவறினால் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்கள் கருகிவிடும் என்பதால் அப்பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இதுகுறித்து காத்தாகுளம் விவசாயி செந்தூரான் கூறுகையில்,"" சென்னை, கடலூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் கொட்டிதீர்த்து வரும் மழையால் விவசாயத்தையும், உடைமைகளையும் இழந்து அப்பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தவித்து வருகின்றனர். ராமநாத புரம் மாவட்டத்தில் காலதாமதமாக துவங்கிய பருவமழை சாரலுடன் ஓய்ந்துவிட்டது. நீர்நிலைகளில் தண்ணீர் தேங்காததால் சாகுபடி செய்துள்ள பயிர்களை காப்பாற்ற முடியுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. பருவமழை தொடர்ந்து பெய்தால் மட்டுமே பயிர்களை காப்பாற்ற முடியும். தவறினால் என்னைப்போன்ற சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகும்," என்றார்.

**மழை வந்தது முன்னே; நோய் வரும் பின்னே; உஷாரய்யா... உஷாரு!**

வரலாறு காணாத மழையை பார்த்தாச்சு. 'மழை வருமா' என, வானிலை அறிக்கை கொடுக்க ரமணன் இருக்கார்; ஆனால், 'மிஸ் கொசு' உபயத்தால், எளிதில் பரவும் மழைக்கால நோய்கள் பற்றி, நாம் தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குறிப்பாக, மழை வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களின் நலனை கருதி, இதோ...

**மஞ்சள் காய்ச்சல்:**

**கிருமி:** ப்ளாவி வைரஸ்**பரவும் முறை:** தொற்றுநோய் கொசுக்களால் மட்டும் பரவும். இதில், மூன்று நிலைகள் உள்ளன. **ஆரம்ப நிலை:**தலைவலி, உடல்தசை மட்டும் மூட்டுக்களில் வலி, காய்ச்சல், முகத்தில் சிவப்புத்தன்மை, பசியின்மை, வாந்தி, மஞ்சள் காமாலை பொதுவானது. இந்த அறிகுறிகள் உடனே மறைந்துவிடும் வாய்ப்பு உண்டு. **ஆற்றல் குறையான கால அளவு நிலை:** 3 - 4 நாட்களில் காய்ச்சலும், மற்ற அறிகுறிகளும் மறைந்து போகும். இதனால், மக்கள் பலர் சுகமாகி விடுவர். ஆனால், சிலர் அபாயமான மூன்றாம் நிலையை, 24 மணி நேரத்தில், மயக்க நிலையை அடைவர்.**அதிமயக்க நிலையின் கால நிலை:** பல உறுப்புகளின் செயலிழப்பு, இதயம், ஈரல், சிறுநீரகம், ரத்தக்கசிவு, மூளையில் ரத்தக்கசிவு, மூளை செயலிழத்தல் ஏற்படலாம். **அறிகுறிகள்:** தாறுமாறான இதய துடிப்பு, ரத்தக்கசிவு, சிறுநீர் கழித்தல் குறைந்து விடும். மனப்பதற்றம், வாந்தி, உடல்தசை வலி, காய்ச்சல், தலைவலி, மஞ்சள் காமாலை, தசைவலி, கண்கள் சிவத்தல் மற்றும் கோமா நிலையை கூட அடையலாம்.

**விளைவுகள்:** கோமா, இறப்பு.**தடுப்பு முறைகள்:** *மஞ்சள் காய்ச்சல் பரவியுள்ள பகுதியில் நீங்கள் பயணிக்க நேரிட்டால், கொசு தடுப்பு சாதனங்களை பயன்படுத்தவும். *உடல் முழுவதும் மூடும்படியான உடைகளை அணியவும். *தோலுக்கடியில் தடுப்பு ஊசி போட வேண்டும். சிகிச்சை முறை:நோய்க்கேற்ற சிகிச்சையை, உரிய மருத்துவரை ஆலோசித்து, உடனே சிகிச்சை மேற்கொள்ளுதல் நலம் பயக்கும். குறுகிய கால தடுப்பு முறைகள்: *'குளோரின்' கலந்த நீர் காய்ச்சிக் குடித்தல் *ஹெப்படைடிஸ் ஏ வைரஸ் தடுப்பு ஊசி

*மலேரியா தடுப்பு முறை

*காய்ச்சலின் அறிகுறி கண்டவுடன், உங்கள் மருத்துவர் மூலம் கண்டறிந்தவுடன் சிகிச்சை மேற்கொள்ளுதல்.

**முக்கிய குறிப்புகள்:**

*இருப்பிடத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்

*செருப்பு அணியாமல் நடக்கக் கூடாது

*சாலைகளில், வீடுகளின் வெளிப்புறத்தில் எச்சில் துப்புவதை தவிர்க்கவும்

*வீட்டிற்குள் வந்தவுடன் கை, கால்களை சுத்தமாகக் கழுவவும்

*பழைய, மீதமான உணவை பிரிட்ஜில் வைத்து மீண்டும் சூடுபடுத்தி உண்ணக் கூடாது *வீட்டிற்கு அருகில் உள்ள நீர் தேக்கங்களை அப்புறப்படுத்தவும்.

**டைபாய்டு காய்ச்சல்:**

**கிருமி:**சல்மோனெலி டைபி.இந்த கிருமி மிகவும் பொதுவானது. **பரவும் முறை:**அசுத்தமான உணவு, குளிர்பானங்கள் மற்றும் குடிநீர் வழியே பரவும்.

**ஆரம்ப அறிகுறிகள்:** காய்ச்சல், மாறுபட்ட உடல் சோர்வு, உடல்நல மாற்றம், வயிற்று வலி, வயிற்றிலும் அல்லது மார்பிலும் சிலருக்கு அரிப்பு தோன்றும். 'ரோஸ் ஸ்பாட்' என்றழைக்கப்படும் சிறு சிவப்புப் புள்ளிகளின் தோற்றம், வயிற்றில் குறிப்பிட்ட இடத்தில் பலவீனம், மலத்தில் ரத்தம், குளிர், பதற்றம், நிலையற்ற மனநிலை, தீவிர மயக்க நிலை, மெதுவான சோம்பல் நிலையுடன் சோர்வாகக் காணப்படும், உடலில் சோர்வு, தளர்ச்சி மற்றும் பலவீனம்.

**பரிசோதனைகள்:**

முழுமையான ரத்தப் பரிசோதனை

முதல் வாரம் - ரத்த வளர்சோதனை

இரண்டாவது வாரம் - ப்ளோரசன்ட் உடல் எதிர்ப்பிகள்

மூன்றாவது வாரம் - ரத்த தட்டை அணுக்கள் குறைவுபடும்

நான்காவது வாரம் - மலம் சோதனை

விளைவுகள்: குடலில் ரத்தக்கசிவு, குடலில் துளை ஏற்பட்டு ரத்தம் வெளியேற்றம், சிறுநீரகம் செயலிழத்தல்

எலி காய்ச்சல்

**கிருமி:** லெப்டோஸ்பைரா பாக்டீரியா

**பரவும் வழி:**அதிக எண்ணிக்கையாக எலி போன்ற பிராணிகளின் சிறுநீர் மூலம் பரவும்.

**அறிகுறிகள்:** 4 முதல் அல்லது 14 நாள் அன்று நோயின் அறிகுறி தென்படும். **முதல் நிலை:**சளிக்காய்ச்சல் போல் தென்படும். வறட்டு இருமல், அதிகமான காய்ச்சல், பயங்கர தலைவலி, உடல்வலி, வாந்தி, பேதி மற்றும் உடலில் நடுக்கம்.

**இரண்டாம் நிலை:**மூளைக்காய்ச்சல், ஈரல் பாதிப்பும், மஞ்சள் காமாலை, சிறுநீரக செயலிப்பு.

பரிசோதனை - நோயறியும் ஆய்வுகள்:

*ரத்தத்தில் எதிருக்கிகள் அறிதல்

*முழுமையான ரத்தப் பரிசோதனை

*பெருமூளை தண்டு வட மண்டலம்

*ஈரல் செரிமான பொருள் வகை அறிதல்

*சிறுநீர் சோதனை

**விளைவுகள்:***மூளைக்காய்ச்சல், ரத்தக்கசிவு

**ஹெபடைடிஸ் ஏ வைரஸ்**

**கிருமி:** ஹெபடைடிஸ் ஏ வைரஸ்

**பரவும் முறை:**வெளி உணவகங்களின் மூலம் உணவு உண்பதாலும், அசுத்தமற்ற முறையில் உணவு தயாரிப்பதன் மூலம் மலக்கழிவுகளாலும் ஏற்படும். சாக்கடை நீர் கலப்பினாலோ, கழிவுப் பொருட்களினால் உண்டாகிய காய், கனிகள் உண்பதன் மூலம் பரவ வாய்ப்புண்டு. நோய்த் தாக்கப்பட்டவரின் ரத்தம் அல்லது மலம் மூலம் பரவும்.

**அறிகுறிகள்:**தீவிரமற்ற வைரஸ் எனினும் அதன் தாக்கம், குறிப்பாக பெரியவர்களுக்கும் பல மாதங்கள் வரை நீடிக்கும். கருமையான சிறுநீர், மயக்கம், தோலரிப்பு, பசியின்மை, காய்ச்சல், வெளிர் அல்லது வண்ணமில்லா மலம், மஞ்சள் நிறத் தோல், கண்கள் மஞ்சளாகி, காமாலை காணப்படும்.

**பரிசோதனை:**மருத்துவ பரிசோதனையின் போது ஈரல் வீக்கமும், அதன் பாதிப்பும் மருத்துவர் கண்டறிவார்.

**ரத்த பரிசோதனைகள்:**

ரத்தத்திலுள்ள AST, ALT அளவுகள் அதிகரித்திருக்கும். ரத்தத்தில் Anti HAV காணப்படும். ரத்தத்தில் Anti Hav of IgM வகை காணப்படும். ஈரல் செயல் சோதனை.

**விளைவுகள்:**

ஆயிரத்தில் ஒருவருக்கு அச்சுறுத்தும் ஹெப்படைடிஸ் உயிர்க்கு அச்சமூட்டும்.

**தடுப்பு முறைகள்:**

*நோய் கிருமி பரவாமல் உரிய முறைகளை மேற்கொள்ளல்

*கைகளை சுத்தமாகக் கழுவவும்

*சுத்தமற்ற நீரையும், உணவையும் தவிர்க்கவும்

*தடுப்பு ஊசி, இந்நோய் பரவியிருக்கும் இடங்களுக்குச் செல்லும் முன், இந்த தடுப்பு ஊசி போட்டுக் கொண்டால் பாதுகாப்புக் கொடுக்கும்.

பயணிப்பவர் கடைபிடிக்க வேண்டியவை:

*பால் பொருட்களைத் தவிர்த்தல். பச்சையாகவோ அல்லது குளிரூட்டப்பட்ட இறைச்சி மற்றும் மீனை தவிர்க்கவும்.

**மருத்துவர் பிரபுராஜ்** prabhuraj.arthanaree@gmail.com

மழைக்கால நோய்கள் ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு விதமான காரணிகள் உள்ளதால், ஒரே தடுப்பூசி தயாரிக்க முடியாது; உலக சுகாதார நிறுவனமும், காலராவுக்குக்கூட தடுப்பூசியை பரிந்துரைப்பதை நிறுத்தி விட்டது.

**இளங்கோ பொது சுகாதார சங்கத்தின் தமிழக தலைவர்**பாதுகாப்பான குடிநீர், சுகாதாரமான உணவு முறையும் தான், மழைக்கால நோய்களைத் தடுக்கும். நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த, நிலவேம்பு கஷாயம் தரப்படுகிறது. ஆங்கில மருத்துவத்தில் குறிப்பிடும் படியாக மருந்து இல்லை.

## 2,000 ஏக்கர் விளை நிலங்கள் மூழ்கின 'பயிர் சேதத்திற்கு நிவாரணம் வேண்டும்'

கும்மிடிப்பூண்டி: தொடர் மழை மற்றும் ஆறு, ஏரிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், கும்மிடிப்பூண்டி பகுதியில், 2,000 ஏக்கர் விளை நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.கனமழையால், ஆறுகள், ஏரிகள், குளங்கள் நிரம்பி வழிந்து, சுற்றியுள்ள விளை நிலங்களில் மழை வெள்ளம் புகுந்து தேங்கி உள்ளது.

குறிப்பாக கும்மிடிப்பூண்டி பகுதிக்கு உட்பட்ட ஏடூர், ஏ.என்.குப்பம், அயநல்லூார், குருவிஅகரம்,

ஈகுவார்பாளையம், நாயுடுகுப்பம், கண்ணம்பாக்கம், கண்ணன்கோட்டை, கரடிபுத்தூார், தேர்வாய், வாணியமல்லி, பூவலம்பேடு, பெரியபுலியூர், பாஞ்சாலை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள, 2,000 ஏக்கர் விளை நிலங்கள் நீரில் மூழ்கி, பயிர்கள் சேதமடைந்து உள்ளன.

இதனால், அப்பகுதி விவசாயிகள் பெரும் துயரத்தில் ஆழ்ந்துள்ளனர்.கும்மிடிப்பூண்டி வட்டார வேளாண் உதவி இயக்குனர் சண்முகய்யா தலைமையில், கிராம நிர்வாக அலுவலர்கள், வேளாண் துறை அலுவலர்கள் கொண்ட குழு, பாதிப்புகளை கணக்கிட்டு வருகின்றனர்.

இதுகுறித்து வேளாண்துறை அலுவலர் கூறியதாவது:இது வரையிலான கணக்கெடுப்பில், 2,000 ஏக்கர் பயிர் நிலங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளது தெரியவந்துள்ளது. எளாவூர், ஆரம்பாக்கம் ஆகிய கிராம பகுதிகளில், 250 ஏக்கரில் பயிரிடப்பட்ட மரவள்ளி கிழங்குகள் மழை நீர் தேங்கியதால் அழுகியுள்ளன.இவ்வாறு அவர் கூறினார்.

அயநல்லார் ஏரி நிரம்பி அதன் உபரிநீர் கால்வாய் வழியாக சென்று பழவேற்காடு பகுதியில் கடலில் கலக்கிறது. கால்வாய்க்கு மேல், 5 அடி உயரத்தில், வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால், கால்வாயை சுற்றியுள்ள, 300 ஏக்கர் நெற்பயிர்கள், தண்ணீரில் மூழ்கியுள்ளன. பயிர் சேதத்திற்கு அரசு, உரிய நிவாரணம் வழங்க வேண்டும். எஸ்.பலராமன், அயநல்லூார்

## கோமுகி அணையிலிருந்து 3000 கன அடி நீர் வெளியேற்றம்

கச்சிராயபாளையம்: கோமுகி அணையிலிருந்து, 3,000 கன அடி உபரி நீர், நேற்று வெளியேற்றப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம், கல்வராயன் மலை பகுதியில், நேற்று முன்தினம் இரவு கன மழை பெய்தது. இதனால், கச்சிராயபாளையம் அடுத்த கோமுகி அணைக்கு, கல்வராயன் மலையில் உற்பத்தியாகின்ற கல்படை, பொட்டியம், பரங்கிநத்தம் ஆகிய ஆறுகளின் வழியாக நீர் வரத்து அதிகரித்தது.

கோமுகி அணையின் நீர் மட்டம், திடீரென 44 அடிக்கு மேல் நேற்று காலை உயர்ந்தது. அணையின் பாதுகாப்பு கருதி, 44 அடி நீர் மட்டத்திற்கு இருப்பு வைத்துக்கொண்டு, உபரி நீர் வெளியேற்றப்பட்டது. கோமுகி அணையின் புதிய ஷட்டர் வழியாக, வினாடிக்கு 3,000 கன அடி உபரி நீர், நேற்று காலை 6:00 மணி முதல், 9:30 மணி வரை வெளியேற்றப்பட்டது. இதனால், கோமுகி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

**விலங்குகளால் சேதம்: விவசாயிகள் வேதனை**

ஆத்தூர்: ஆத்தூர் அருகே, பைத்தூர் மலை அடிவாரத்தில், தாண்டவராயபுரம், மோட்டூர், சொக்கநாதபுரம், சீலியம்பட்டி உள்ளிட்ட கிராமங்கள் உள்ளன. நேற்று முன்தினம், இரவு 10 மணியளவில், மோட்டூரை சேர்ந்த விவசாயி அன்பழகன் என்பவரது, மக்காச்சோள தோட்டத்தில் புகுந்த காட்டுப் பன்றிகள், செடிகளை அடியோடு தோண்டி, கதிர்களை நாசம் செய்துள்ளது. இதில், அரை ஏக்கருக்கு மேல், பயிர் சேதமடைந்துள்ளது. அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள மரவள்ளி, மக்காச்சோளம் மற்றும் தானிய பயிர்களை, காட்டுப்பன்றிகள் சேதப்படுத்தி வருவதால், விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு இலவச பயிற்சி**

சேலம்: சேலம் விவசாய ஆலோசனை மைய தலைவர் ஜனகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சேலம், ஸ்டேட் பாங்க் காலனி, திருஞானசம்பந்தர் சாலையில் உள்ள, வேளாண் பயிற்சி மற்றும் விவசாய ஆலோசனை மையத்தில், விதை முதல் அறுவடை வரை விவசாயம் தொடர்பாக, எல்லாவிதமான பயிற்சியும் அளிப்படுகிறது. மேலும், விவசாயிகளின் பல்வேறு சந்தேகங்களுக்கும், பதிலளிக்கப்படும். கெயில் நிறுவன நிதியுதவியில், பயிற்சி இலவசமாக அளிக்கப்படுகிறது. தேவைப்படும் பட்சத்தில், விவசாயிகளின் நிலத்துக்கு, நேரில் வந்து, செய்முறை விளக்கமும் செய்து காட்டப்படும். நவம்பர் மாத பயிற்சி வரும், 23ல் துவங்கி, 27ம் தேதி

வரை, ஐந்து நாட்கள் நடக்க உள்ளது. பயிற்சி பெற விரும்பும் விவசாயிகள் 94436-64578 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு, பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**ஆந்திர மாநிலத்தில் வறட்சி எதிரொலி: தமிழக மஞ்சள் விலை மேலும் உயர வாய்ப்பு**

நாமகிரிப்பேட்டை: ஆந்திராவில் நடப்பாண்டு ஏற்பட்ட கடும் வறட்சியால், லட்சக்கணக்கான ஏக்கரில் பயரிட்டுள்ள மஞ்சள் கருகிவிட்டது. இதனால், தமிழகத்தில் மஞ்சள் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகக வியாபாரிகள் தெரிவித்தனர்.

தரத்தில் இந்தியா முதலிடம்: உலகளவில், மஞ்சள் சாகுபடி பரப்பில் இந்தியாவுக்கு, ஐந்தாவது இடமாக இருந்தாலும், உற்பத்தியில், இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. ஆனால், தரத்தில் இந்திய மஞ்சளுக்கு தான் முதலிடம். அதிலும், தமிழகத்தில் ஆத்தூர், நாமகிரிப்பேட்டை, ஈரோடு பகுதிகளில் விளையும் மஞ்சள் முதல் தரமானவை. இந்திய அளவில் ஆந்திரா மாநிலம், நிஜாமாபாத், ஈரோடு, சேலம், நாமக்கல் ஆகிய இடங்களில் மஞ்சள் விற்பனைக்கு என பெரிய மார்க்கெட்டுகள் உள்ளன. இங்கு வாங்கப்படும் மஞ்சள், உள்ளூர் தேவைக்கு போக, சிங்கப்பூர், மலேசியா,ஸ்ரீலங்கா, யூரோப்பிய நாடுகள், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆந்திராவில் சராசரியாக, 59 ஆயிரத்து, 500 ஹெக்டேரில் மானாவரி பயிராக மஞ்சள் பயிரிடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர், நவம்பரில் தான் மஞ்சள் வேர் கிழங்காக மாறும். இந்த சமயத்தில், ஆந்திராவில் பருவமழை பெய்வதால், விளைச்சலும் பல மடங்கு அதிகமாக இருக்கும்.

51 சதவீதம் ஆந்திரா: இதனால், இந்தியாவின் மொத்த மஞ்சள் உற்பத்தியில், 51 சதவீதம் ஆந்திராவில் இருந்து கிடைக்கிறது. பிப்ரவரி மாதத்தில், அறுவடை தொடங்கியதும், ஆந்திரா மஞ்சள் வரத்தும் அதிகரிக்கும். தமிழக மஞ்சலுக்கு விலை அதிகம் கிடைக்கும் என்பதால், ஆந்திரா வியாபாரிகள் தமிழகத்திற்கு விற்க கொண்டு வந்துவிடுவர். அப்போது, தமிழகத்திலும் மஞ்சள் விலை குறைந்துவிடும். ஆனால், நடப்பாண்டு, அக்டோபர், நவம்பர் மாதங்களில்

ஆந்திராவில் பருவமழை பொய்த்ததால், லட்சக்கணக்கான ஏக்கரில் பயிரிட்டுள்ள மஞ்சள் கருகியுள்ளது. இனிமேல் மழை பெய்தாலும், மஞ்சள் பயிருக்கு பயனிருக்காது என்றும் இந்த வருடம் மஞ்சள் உற்பத்தி பாதியாக குறைந்துவிடும் எனவும் கூறப்படுகிறது.

நிச்சயம் உயரும்: இதுகுறித்து நாமகிரிப்பேட்டையை சேர்ந்த மஞ்சள் வியாபாரிகள் கூறியதாவது: ஆந்திராவில் மானாவரியாக பயிரிட்டுள்ள மஞ்சள் அனைத்தும் கருகிவிட்டது. ஆழ்துளை கிணறு, ஆற்றுப்பாசனம் தவிர மற்ற நிலங்களில் இருந்து, மஞ்சள் அறுவடை செய்ய வாய்ப்பில்லை. எனவே, அடுத்தாண்டு மஞ்சள் வரத்து மிகவும் குறைந்துவிடும். மஞ்சள் உற்பத்தியில் அடுத்த நிலையில் உள்ள ஒடிசாவிலும் இந்தாண்டு மஞ்சள் சாகுபடி குறைவாகவே உள்ளது. எனவே, மூன்றாவது இடத்தில் உள்ள தமிழகத்தில், மஞ்சள் விலை நிச்சயமாக உயரும். கடந்த, இரு மாதத்தில் மஞ்சளின், இரு மடங்குக்கு உயர்ந்துள்ளது. நடப்பு, 2015ம் ஆண்டு முடிவதற்குள்ளேயே மஞ்சள் விலை புதிய உச்சத்தை தொடும். அதேபோல், அடுத்த வருடமும் விலை குறையாமல் இருக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தொடர்மழையால் பாதிப்பு: 11,000 வாழைமரம் சாய்ந்தது

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில், கடந்த வாரம் பெய்த தொடர்மழையால், 11 ஆயிரம் வாழை மரங்கள் சாய்ந்தன.

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில், கடந்த வாரம் தொடர் மழைக்கு, வீடுகள், மரங்கள், வாழை, சோளம் உள்ளிட்ட வேளாண் பயிர்கள் அதிகளவு பாதிக்காப்பட்டுள்ளது. மழை சேதம் குறித்து நாமகிரிப்பேட்டை வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் புவனேஷ்வரி கூறியதாவது: நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில், ஒரு லட்சத்திற்கு அதிகமான வாழைமரங்கள் உள்ளன. கடந்த வாரம் பெய்த மழையில், 11 ஆயிரம் வாழை மரங்கள் சாய்ந்து விட்டது. சில, இடங்களில் மரவள்ளி கிழங்கு வயலும் சேதமடைந்துள்ளன. வாழை மரங்களுக்கு நிவாரண தொகை வழங்க வேண்டும் என விவசாயிகள் மனு கொடுத்துள்ளனர். அரசு எவ்வளவு நிவாரண தொகை வழங்கவுள்ளது என்று தெரியவில்லை. நிவாரணம் வழங்கினால், விவசாயிகளுக்கு

உடனடியாக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

இதுகுறித்து நாமகிரிப்பேட்டை பகுதி விவசாயிகள் கூறியதாவது: கடந்த, அக்டோபர் மழையில், அரியாகவுண்டம்பட்டி, வெள்ளக்கல்பட்டி, நாமகிரிப்பேட்டை பகுதியில், 25 ஆயிரம் வாழை மரங்கள் சாய்ந்தன. இதையும், பாதிக்கப்பட்ட வாழைகளுடன் சேர்த்து அரசு நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

### பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

சத்தியமங்கலம்: பில்லூர் அணையில் தண்ணீர் திறக்கப்பட்டதால் பவானிசாகர் அணைக்கு வரும் தண்ணீர் அளவு அதிகரித்துள்ளது. நீலகிரி மலைப்பகுதியில் கடந்த, இரண்டு நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் கோவை மாவட்டம் பில்லூர் அணை நிரம்பியது. அணையில் இருந்து வினாடிக்கு, 6 ஆயிரம் கன அடி தண்ணீர், பவானி ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் பவானிசாகர் அணைக்கு வருகிறது. இதனால் அணை நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. நேற்றிரவு ஒன்பது மணி நிலவரப்படி, பவானிசாகர் அணைக்கு வினாடிக்கு, 10 ஆயிரத்து, 600 கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணை நீர்மட்டம், 70.97 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் மூலம் வினாடிக்கு, 1,800 கன அடி, பவானி ஆற்றின் மூலம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப் பகுதிக்கு, 500 கன அடியும் திறக்கப்பட்டது. பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### 27ல் வேளாண் குறைதீர் கூட்டம்

ஈரோடு: ஈரோடு மாவட்ட வேளாண் குறைதீர் கூட்டம், கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், வரும், 27 ம் தேதி நடக்கிறது. கலெக்டர் பிரபாகர் தலைமையில் நடக்க உள்ள இக்கூட்டத்தில், காலை, 11 முதல், 11.30 மணி வரை மனுக்கள் பெறப்படும். 11.30 முதல், 12.30 மணி வரை விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயம் தொடர்பான தங்கள் பகுதி பிரச்னைகள்,

கருத்துக்களை தெரிவிக்கலாம். மதியம், 12.30 முதல், 1.30 மணி வரை, அலுவலர்கள் விளக்கம் அளிக்க உள்ளனர். விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று, தங்கள் பிரச்னைகளை தெரிவிக்கலாம்.

**பவானிசாகர் பழைய மீன் பண்ணையில் புதியதாக மீன் குஞ்சு பொரிப்பகம் திறப்பு**

பவானிசாகர்: பவானிசாகரில், 45 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட, புதிய மீன்குஞ்சு பொரிப்பகம் மற்றும் மீன் குளத்தை, முதல்வர் ஜெயலலிதா காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

பவானிசாகர் பழைய மீன் பண்ணையில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 44.50 லட்சம் ரூபாய் செலவில் புதியதாக, மூன்று மீன் குஞ்சு பொரிப்பகமும் மற்றும் தாய் மீன் வளர்ப்பு குளமும் புதுப்பிக்கப்பட்டது. இங்கு, செயற்கை முறையில், 10 கோடி மீன் குஞ்சுகள் பொரிக்கப்பட்டு பிற அணைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. தற்போது கூடுதலாக, மூன்று மீன் குஞ்சு பொரிப்பகம் கட்டுப்பட்டுள்ளதால் கூடுதலாக, ஐந்து கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும். இந்த மீன் குஞ்சு பொரிப்பகங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட மீன் குளத்தை, முதல்வர் ஜெயலலிதா, காணொலி காட்சி மூலம் நேற்று திறந்து வைத்தார். அதே நேரத்தில், பவானிசாகர் மீன் பண்ணையில் நடந்த நிகழ்ச்சியில் பவானிசாகர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் பழனிச்சாமி, பவானிசாகர் பேரூராட்சித் தலைவர் வெங்கடாசலம், மீன்வளத்துறை இணை இயக்குநர் தில்லை ராஜன், பேரூராட்சி மற்றும் ஒன்றிய கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்

**தேயிலையில் இருந்து ஒயின் தயாரிக்க மானியத்துடன் நிதியுதவி**

ஊட்டி: 'தேயிலையில் இருந்து ஒயின் உள்ளிட்ட மதிப்புக் கூட்டிய பொருட்கள் தயாரிக்க மானியத்துடன் நிதியுதவி வழங்கப்படும்' என, தமிழக அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறை முதன்மை செயலாளர் ஜக்மோகன் சிங் ராஜு பேசினார்.

மாநில அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில், தேயிலையில் இருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பது தொடர்பான இரு நாள் கருத்தரங்கு, ஊட்டியில் நேற்று துவங்கியது.

கருத்தரங்கை துவக்கி வைத்து, துறை முதன்மை செயலர் ஜக்மோகன் சிங் ராஜூ பேசியதாவது:

தேயிலை விலை வீழ்ச்சி என்பது, உலகளாவிய பிரச்னை; இலங்கை, கென்யா, மலாவி, சீனாவில் தேயிலை உற்பத்தி அதிகரிக்கிறது. இது, இந்திய தேயிலைத் தொழிலில் எதிரொலிக்கிறது.

இந்நிலையில், தேயிலை விவசாயிகள், தொழிற்சாலைகள், தேயிலை தொழில் சார்ந்த நிறுவனங்கள், தேயிலை தூளை மதிப்புக் கூட்டி

மார்க்கெட்டிங் செய்து, கூடுதல் வருமானம் பெற வேண்டும்.

தேயிலையில் இருந்து ஒயின் தயாரிக்க முடியும் என, ஆய்வில் தெரிய வந்துள்ளது. தேயிலை தோட்டங்களில் ஊடுபயிராக ஜெரேனியம், பைராத்ரன் போன்ற தாவரங்களை வளர்க்க வேண்டும்; இந்த தாவரங்களில் இருந்து தயாரிக்கப்படும் வாசனை திரவியப் பொருட்களுக்கு உலக நாடுகளில் மவுசு அதிகம்; இந்த தாவரங்களை வளர்ப்பதற்குரிய சூழல் நீலகிரியில் உள்ளது.

தேயிலையில் இருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள், மூலிகை, நறுமண தாவரங்கள் சார்ந்த பொருள் தயாரிக்க முன்வரும் தேயிலை விவசாயிகள், நிறுவனங்களுக்கு, அதற்குரிய உட்கட்டமைப்புகளை ஏற்படுத்த, 75 சதவீத மானியத்துடன், மூன்று கோடி ரூபாய் வரை நிதியுதவி வழங்கப்படும்.இவ்வாறு, ஜக்மோகன் சிங் ராஜூ கூறினார்.

### பறவைகளின் "வயகரா 'வயிற்றுக் கெழுத்தி மீன்கள்?

திண்டுக்கல்,: மழைக் காலங்களில் குட்டை, குளங்களில் வளரும் வயிற்றுக்கெழுத்தி மீன்களை, கோழிகள், வாத்துக்கள் வளர்ப்போர் அவற்றின் இனவிருத்திக்கு பயன்படுத்தி வருகின்றனர். பருவமழை காலங்களில், குளம், குட்டைகளில் அதிகளவில் வயிற்றுக் கெழுத்தி மீன்கள் வளர்கின்றன. இவற்றை நாரை, கொக்கு, முக்குழிப்பான், மைனா, உள்ளான் போன்ற பறவைகள் உணவாக உட்கொள்ளும். பறக்க உதவும் இறக்கைகளுக்கு வயிற்றுக் கெழுத்தி மீன்கள் மூலம் அதிக சத்துக்கள் கிடைப்பதால் பறவைகள் விரும்பி உண்கின்றன. இதற்கென்றே குளம், குட்டைகளுக்கு அருகிலுள்ள, மரஞ்செடி கொடிகளில் பறவைகள் தஞ்சமடைகின்றன. தற்போது மழைக்காலம் என்பதால் திண்டுக்கல் பகுதியில் குளம், குட்டைகளில்

தண்ணீர் தேங்கி இவ்வகை மீன்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவற்றை பிடிக்கும் கிராமத்தினர், நாட்டுக்கோழி, வாத்துக்களுக்கு இரையாக வழங்குகின்றனர். இதன்மூலம் அவற்றின் இனவிருத்திக்கும் உதவியாக இருப்பதாக கூறுகின்றனர்.

பறவைகள் ஆர்வலர் சதாசிவம் கூறியதாவது: கொக்கு, நாரை, உள்ளிட்ட 22 வகையான பறவைகள் இம்மீன்களை விரும்பி உண்கின்றன. மழைக் காலங்களில் பறவைகளின் ஜீரண உறுப்புக்களை பலப்படுத்தும் உணவாக வயிற்றுக் கெழுத்தி மீன்கள் உள்ளன.

இந்த மீன்கள் வடகிழக்கு பருவமழை காலங்களில்பறவைகளுக்கு உணவாகிறது. தற்போது குளம் குட்டைகளில் இதை பிடித்து வாத்துக்களுக்கு வழங்குகின்றனர். இதனால் வாத்துக்கள் மேய்ச்சலில் சுறுசுறுப்படையும். இதன் மூலம் அதிக பலம் பெறுவதால், பறவைகளுக்கு இனவிருத்தியும் சாத்தியமாகலாம், என்றார்.

### மரக்கன்றுநடும் விழா

வடமதுரை, :வடமதுரை போஜனம்பட்டி ரோட்டில் பசுமை சுற்றுச்சூழல் இயக்கம் சார்பில் 70 தூங்குமூச்சி, 70 வேம்பு மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது. தலைவர் பாப்பாத்தி தலைமை வகித்தார். செயல் அலுவலர் வன்னியானந்தம் முன்னிலை வகித்தார். உதவியாளர் அழகர்சாமி வரவேற்றார். மரக்கன்று நடும் பணி பழனிச்சாமி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். பேரூராட்சி துணைத்தலைவர் பாலசுப்பிரமணி, பசுமை சுற்றுச்சூழல் இயக்க நிர்வாகி பிரசன்னா, கவுன்சிலர்கள் பங்கேற்றனர்.

### தாண்டிக்குடியில் கனமழை

தாண்டிக்குடி, :தாண்டிக்குடி மற்றும் அதனைச்சுற்றியுள்ள மலைக்கிராமங்களில் நேற்று மாலை முதல் கனமழை பெய்து வருகிறது.தாண்டிக்குடியில் மதியம் முதலே விட்டு, விட்டு கனமழை பெய்தது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு பண்ணைக்காடு, தடியன்குடிசை, கே.சி.பட்டி உள்ளிட்ட கீழ்மலை கிராமங்களில் கனமழை பெய்யத் துவங்கியது. சில தினங்களாக சாரல் நீடித்து வந்த நிலையில் தற்போதைய கனமழை பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை

பாதித்துள்ளது. மருதாநதி, தலையாறு,குடகனாறு ஆறுகளில் கனிசமாக நீர்வரத்து அதிகரித்துள்ளது.

**நிலப்போர்வை அமைக்க 50 சதவீதம் மானியம்**

கம்பம்,:தோட்டங்களில் "களை' வளர்வதை தடுக்க நிலப்போர்வை அமைக்க தோட்டக்கலைத்துறை 50 சதவீதம் மானியம் வழங்கி வருகிறது.இத்திட்டப்படி ஒவ்வொரு பயிரை சுற்றிலும் 3 அடி சுற்றளவிற்கு பாலிதீன் சீட்டுக்களை விரித்து விட வேண்டும். இதனால் களை வளராது. தண்ணீர் தேவை குறையும். இருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டிய பயிருக்கு ஒரு முறை பாய்ச்சினால் போதும்.

நிலப் போர்வை அமைக்க விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ. 32 ஆயிரம் செலவாகும். இதில் 50 சதவீதம் ரூ. 16 ஆயிரம் மானியமாக வழங்கப்படும். மீதத் தொகையை விவசாயிகள் செலவழிக்க வேண்டும். ஆர்வம் உள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**நெல், வாழை, கரும்பு, வெற்றிலை பாதிப்பு ஜெயமங்கலம் பகுதி விவசாயிகள் கண்ணீர்**

தேவதானப்பட்டி: பெரியகுளம் தாலுகா, ஜெயமங்கலத்தில் நேற்று முன்தினம் இரவில் பெய்த கனமழையால், கரும்பு, வாழை, வெற்றிலைக் கொடி மற்றும் நடவு செய்த நெல் வயல்கள் உட்பட 500 ஏக்கர் பரப்பளவில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

பெரியகுளம் தாலுகா பகுதியில் பெய்த தொடர் மழையால் சில்வார்பட்டி சிறுகுளம், ஜெயமங்கலம் வேட்டுவன்குளம், நல்லகருப்பன்பட்டி நாரணன்குளம், சிந்துவம்பட்டி ஒட்டக்குளம், பொம்மிநாயக்கன்பட்டி, புதுக்குளம், குள்ளப்புரம் பெரியகண்மாய், மருகால்பட்டி சிறுகுளம் ஆகியவை நிறைந்து மறுகால் செல்கின்றன. நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகால வரை பெய்த மழையால் வராகநதியில் வெள்ளம் அதிகரித்தது. வேட்டுவன்குளம் கண்மாய் நீர்வரத்து வாய்க்காலில் அதிகமான நீர் வரத்து ஏற்பட்டது. ஜெயமங்கலம் ஒட்டுப்பாலம் அருகில் இருந்து மேல்மங்கலம் முத்தையா

கோயில் அருகில் உள்ள தடுப்பணை வரை உள்ள 500 ஏக்கர் விளை நிலங்களில் 3 அடி வரை தண்ணீர் தேங்கியது. நடவு செய்து 10 முதல் 20 நாட்கள் வரை ஆன நெல் வயல்கள் நீரில் மூழ்கியுள்ளன. நடவு செய்து 6 மாதங்கள் ஆன வாழை, கரும்பு, கொடிக்கால் வயல்களும், நீர் வரத்து வாய்க்கால் அருகில் இருந்த 30 மேற்பட்ட விவசாய கிணறுகள், மின் மோட்டார்களும் நீரில் மூழ்கி உள்ளன. திரும்பி பார்க்கும் இடமெல்லாம் நீராக காட்சியளித்தது.

வெள்ளச் சேதங்களை உடனடியாக மதிப்பீடு செய்து விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

*** தேனி மாவட்டத்தில் தொடர்ந்து மழை...* ஆறு, கண்மாய்களில் வெள்ளப்பெருக்கு* மாவட்டம் முழுவதும் அபாய எச்சரிக்கை**

தேனி,:தேனி மாவட்டத்தில் மழை தொடர்ந்து கொட்டுவதால், ஆறுகள், கண்மாய்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், மாவட்டம் முழுவதும் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது தேனி மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக மழை பெய்து வருகிறது. தினமும் ஓரிரு மணி நேரம் இடைவெளி விட்டு பெய்யும் பலத்த மழையால், மேகமலை, ஹைவேவிஸ், சுருளிமலை, கண்ணகி கோயில் மலை, கம்பராயப்பெருமாள் கோயில் மலை, கோம்பை மலை, தேவாரம் மலை, போடி மெட்டு மலை, வீரப்பஅய்யனார் கோயில் மலை, பெரியகுளம், கொடைக்கானல் மலைப்பகுதிகளில் பெய்யும் மழை அளவை அளவீடு செய்ய மழைமானிகள் இல்லாததால், துல்லியமாக கணக்கெடுக்க முடியவில்லை. இந்த மழையால் பெரியகுளம் வராகநதி, போடி கொட்டகுடி ஆறு, முல்லை பெரியாறு, சுருளியாறு, வைகை நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. நேற்று காலை 8 மணி வரை பெய்துள்ள மழையளவு(மில்லி மீட்டரில்):அரண்மனைப்புதூர் மற்றும் ஆண்டிபட்டி 21, போடி 26, கூடலூர் 57, மஞ்சளாறு 87, பெரியகுளம்18, பெரியாறு 55, சோத்துப்பாறை 9, தேக்கடி 48 , உத்தமபாளைம் 4, வைகை அணை 44, வீரபாண்டி 28. நேற்றுமாலை 6 மணி வரை இதே அளவு மழை பதிவானது. இரவு முழுவதும் மழை தொடர்ந்தது. மாவட்டம் முழுவதும் உள்ள பல ஓடைகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.

அவற்றை பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை அதிகாரிகள் கணக்கெடுத்து வருகின்றனர்.

மாவட்டத்தில் பெரியாறு பாசன பகுதியில் உள்ள 19 கண்மாய்களும் நிரம்பி வழிகின்றன. மஞ்சளாறு வடிநில உபகோட்டத்தில் உள்ள 94 கண்மாய்களில் 26 கண்மாய்கள் முழுமையாக நிரம்பி உள்ளன. 29 கண்மாய்கள் 75 சதவீதமும், 42 கண்மாய்கள் 50 சதவீதமும் நிரம்பி உள்ளன. 200க்கும் மேற்பட்ட ஊராட்சி கண்மாய்களும் நிரம்பி உள்ளன.

அனைத்து ஆறுகள் மற்றும் ஓடைகளிலும் கொள்ளளவை கடந்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் அதன் கரையோரங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும், ஆற்றங்கரை பகுதிக்கு செல்ல வேண்டாம் எனவும் மாவட்ட நிர்வாகம் எச்சரித்துள்ளது. ஆற்றங்கரைகளில் வருவாய்த்துறையினர் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**பச்சைப்புழுதாக்குதல்**

கம்பம்,:கடந்த சில வாரங்களாக தொடர்ந்து சாரல் மழை பெய்து வரும் நிலையில் கம்பம் பள்ளத்தாக்கில் இரண்டாம் போக நடவு பணிகள் கடந்த 20 நாட்களுக்கு முன்பு துவங்கியது.

தற்போது நடவு செய்த வயல்களில் கடந்த சில நாட்களாக பச்சைப்புழு தாக்குதல் தென்படுகிறது. பச்சைப்புழுக்களை ஒழிக்க விவசாயத்துறை ஆலோசனை வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**காய்கறி விலை கடும் உயர்வு கத்தரிக்காய் கிலோ ரூ.80**

திருப்புவனம்: கார்த்திகை பிறந்ததையொட்டி திருப்புவனம், சிவகங்கையில் காய்கறி விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கார்த்திகை முதல் நாளன்று ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து 45 நாட்கள் விரதமிருப்பர். இந்த 45 நாட்களும் சைவ வகை உணவுகளை மட்டுமே சாப்பிடுவது வழக்கம். கார்த்திகை முதல் நாளன்று திருப்புவனம் ஐயப்பன் கோயிலில் ஏராளமான பக்தர்கள் மாலை அணிந்து விரதத்தை தொடங்கினர். வழக்கமாக கார்த்திகை மாதம் காய்கறி விலை உச்சத்தில் இருக்கும். இந்தாண்டு வடகிழக்கு பருவ மழை சற்று முன்னதாக தொடங்கியதால் மலை காய்கறிகள் அறுவடை நின்று போனது. மழை காரணமாக மதுரை மார்க்கெட்டிற்கு பீன்ஸ், உருளைகிழங்கு, பீட்ரூட், முட்டை கோஸ், அவரை வரத்து குறைந்து விட்டது. வரத்து

குறைந்ததால் காய்கறிகளின் விலை கடந்த 10 நாட் களுக்கு முன்னரே உயர்ந்துள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ கத்தரிக்காய் 40 ரூபாய்,நேற்றைய விலை கிலோ 80 ரூபாய்.வெண்டைக்காய் கிலோ 30 ரூபாயில் இருந்து 60 ரூபாயாக உயர்ந்து விட்டது. அவரைக்காய் 40 ரூபாயில் இருந்து 80 ரூபாயாக உயர்ந்து விட்டது. கிலோ பத்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட புடலங்காய் 40 ரூபாயாக உயர்ந்துள்ளது. தக்காளி ரூ.60 லிருந்து 80 வரை விற்கிறது. மற்ற காய்கறிகளின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளதால் விரதமிருக்கும் பக்தர்கள் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். காய்கறி வியாபாரி சண்முகம் கூறுகையில், நாட்டு காய்கறிகள் அதிகளவில் வந்துள்ளது. ஆனாலும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் காய்கறி விலை கணிசமாக உயர்ந்துள்ளது. கத்தரிக்காய் விலை இருமடங்காக உயர்ந்துள்ளது, என்றார்.

## 14 அடியை தாண்டியது வெம்பக்கோட்டை அணை

சிவகாசி: "ஷட்டர் லீக்கேஜ்'சீர் செய்யப்பட்டதால் வெம்பக்கோட்டை அணியில் மழை நீர் வரத்து அதிகரித்து 14 அடியை தாண்டி உள்ளது. சிவகாசி சுற்று பகுதியில் தொடர் மழையால் ஆனைகுட்டம், வெம்பக்கேட்டை அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்து உள்ளன. பாதுகாப்பு காரணங்களுக்காக ஆனைகுட்டம் அணையில் இருந்து வினாடிக்கு ஆயிரம் கனஅடிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. வெம்பக்கேட்டை அணையில்" ஷட்டர் லீக்கேஜ்' இருந்ததால், அணையின் நீர் அளவு குறைந்து வந்தது. இதை தொடர்ந்து நேற்று முன்தினம் அதிகாரிகள் சீர் செய்யும் பணியில் இறங்கி அன்று மாலையே சரிசெய்தனர். இதனால் வீணாக வெளியேறிய நீர் சேமிக்கப்பட்டு அணையில் நீர் தேக்கம் அதிகரித்தது. தற்போது அணையின் நீர்மட்டம் 14 அடியை தாண்டி உள்ளது. தொடர்ந்து மழை பெய்தால்ஓரிரு நாட்களில் வெம்பக்கோட்டை அணை மொத்த உயரத்தை முழு அடியை எட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.

## நீரை காணாத 110 கண்மாய்கள்

விருதுநகர்: மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக பலத்த மழை பெய்து வரும் நிலையில் நேற்றுகாலை மாவட்டத்தில் அதிகபட்சமாக பிளவக்கல்லில் 68.6 மி.மீ., மழை பெய்துள்ளது இருந்தாலும் நீரை காணாத வகையில் 110 கண்மாய்கள் உள்ளன. மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணி நிலவரப்படி

பெய்த மழை விபரம் (மி.மீ.,) சாத்துார்6, ஸ்ரீவில்லிபுத்துார் 24, சிவகாசி 15.80, திருச்சுழி 1, ராஜபாளையம் 55, காரியாபட்டி0.40, வத்திராயிருப்பு 22.80, பிளவக்கல் 68.60, வெம்பக்கோட்டை 32.50 மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியம், பொதுப்பணித்துறைகளுக்குட்பட்ட 997 கண்மாய்களில் 67ல் மூன்று மாதத்திற்கும், 169ல் 2 மாதத்திற்கும், 288ல் ஒரு மாதத்திற்கும் ,344ல் ஒரு மாதத்திற்கும் குறைவான தண்ணீர் உள்ளது. ஒரு வாரம் மழை பெய்தும் 110 கண்மாய்களில் தண்ணீரே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்டு வாரியாக மாவட்டத்தில் மழை

| ஆண்டு | மழை (மி.மீ.,) |
|---|---|
| 2007 | 872.60 |
| 2008 | 1095.70 |
| 2009 | 629.30 |
| 2010 | 940.35 |
| 2011 | 876.10 |
| 2012 | 564.16 |
| 2013 | 624.61 |
| 2014 | 737.38 |

2015ல் மாதம் வாரியாக மழை

| மாதம் | மழை (மி.மீ.,) |
|---|---|
| ஜனவரி | 2.80 |
| பிப்ரவரி | 14.70 |
| மார்ச் | 45.29 |
| ஏப்ரல் | 134.23 |
| மே | 249.11 |
| ஜூன் | 263.84 |
| ஜூலை | 295.11 |
| ஆகஸ்ட் | 327.31 |
| செப்டம்பர் | 405.26 |
| அக்டோபர் | 500.90 |

நவம்பர்(20) 737.38

அணைகளின் நீர் மட்டம் (அடியில்)

*ஆனைக்குட்டம்- 22.73(23.25) *வெம்பக்கோட்டை - 13.70 (22.95)

*கோல்வார்பட்டி- 10.66(17.05) *குல்லூர் சந்தை- 6.72 (7.595)

*சாஸ்தா கோவில் - 32.84(32.84) *பெரியாறு- 45.44(47.56)

*கோவிலாறு -32.81 (42.64)

**காணாத மழை... கரைபுரண்ட வெள்ளம்**

தண்ணீரில் மிதக்குது வெங்காயம்,நெல் பயிர்கள்

தளவாய்புரம்: சேத்தூர் அருகே தொடர் மழை காரணமாக வெங்காயம் உள்ளிட்ட பயிர்கள் தண்ணீரில் மிதக்கின்றன. சேத்தூர் அருகே சுந்தரராசபுரம் எக்கனத்தான் கண்மாய் நிறைந்ததால் இதன் தண்ணீர் மூன்று ஷட்டர்கள் வழியாக வெளியேற்றப்பட்டது. இந்த நீர் ஓடை வழியாக அடுத்த கண்மாய்க்கு செல்லும்.ஓடை தூர்வாரப்படாததால் தண்ணீர் ஓடை வழியாக செல்லாமல் அருகில் உள்ள வயல் வழியாக சென்றதால் அங்கு பயிரிடப்பட்ட நெல்,கரும்பு பயிர்கள் தண்ணீரில் மிதக்கிறது.

விவசாயி ராஜேந்திரகுமார், ""ஓடையில் சில இடங்களில் மண் அடைப்பு இருப்பதால் தண்ணீர் செல்ல முடியாமல் வயல்வெளி வழியாக செல்கிறது. நட்டுநான்கு நாட்களே ஆன நெல் பயிர்கள் அனைத்தும் தண்ணீரில் மிதக்கிறது. துறை அதிகாரிகள் ஓடையை முன்னரே சரிசெய்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது,"என்றார்.

* தேவதானம் நகரைக்குளம் கண்மாய் நிரம்பியும் உவரி நீர் அதிகளவு வந்து கொண்டிருந்த போதும் திறந்து விடப்படவில்லை.இதனால் கண்மாய் பின்புறம் மேட்டுப்பட்டியை சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவர் இரண்டு ஏக்கரில் பயரிட்ட வெங்காய செடிகள் நீரில் முழ்கின. வெங்காயம் இன்னும் சில நாட்களில் பறிக்கும் நிலையில் உள்ளது.இதே போல் அருகில் எட்டு ஏக்கரில் பயிடப்பட்ட நெல் பயிர்களும் தண்ணீரில் மிதக்கிறது.

பாலகிருஷ்ணன்,""கண்மாய்க்கும் வந்த அதிகப்படியான தண்ணீரை வெளியேற்றாததால் பயிர்கள் நீரில் முழ்கின. தேமடைந்த பயிரின் மதிப்பு 1

லட்சம் . அருகில் <உள்ளகாட்டில் பயிர் செய்த நெல்லும் தண்ணீரில் மிதக்கிறது,"என்றார்.

காரியாபட்டி: காரியாபட்டி ஆவியூர், குரண்டி, மாங்குளம், அரசகுளம், கம்பிக்குடி, சீகனேந்தல், டி.கடமங்குளம், நாசர்புளியங்குளம் உள்ளிட்ட கிராமங்களில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் வெங்காயம் பயிரிட்டனர். 40 நாட்கள் ஆன நிலையில் அறுவடைக்கு தாயர் நிலையில் உள்ளது. இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த கனமழைக்கு வெங்காய பயிரில் மழை நீர் தேங்கி அழுகல் நோய் ஏற்பட்டு முற்றிலும் பாதிக்கப்பட்டது. இதனால் ஒரு கிலோ வெங்காயம் ரூ. 50க்கு விற்பனையாகிறது. ஆயிரக்கணக்கில் கடன் வாங்கி செலவு செய்து, கைகொடுக்கும் நேரத்தில் பாதிப்பு ஏற்பட்டதால் கடனை அடைக்க முடியாமல் நஷ்டத்தில் விவசாயிகள் தவிக்கின்றனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**காய்கறிகளின் விலை குறைவது எப்போது?**



தொடர் மழையால் சென்னையில் காய்கறிகளின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது. இவற்றின் விலை எப்போது குறையும் என்பதற்கு வியாபாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

மேலும், காய்கறிகளின் விலை உயர்வு தங்களது வார, மாத பட்ஜெட்டில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக இல்லத்தரசிகள் தெரிவித்தனர்.

சென்னையைப் பொருத்தவரை கடந்த அக்டோபர் 25-ஆம் தேதி வரை காய்கறிகளின் விலை தக்காளி கிலோ ரூ.40, பெரிய வெங்காயம் ரூ.25, பீன்ஸ் 30, கத்தரிக்காய் ரூ.25, முருங்கைக்காய் ரூ.30 என்ற நிலை இருந்தது. இதைத் தொடர்ந்து, கடந்த வாரம் பலத்த மழை பெய்ததால் அவற்றின் விலை இரு மடங்காக அதிகரித்துக் காணப்பட்டது.

இதையடுத்து, சில்லறை விலையில் ஒரு கிலோ தக்காளி கிலோ ரூ.110 வரையிலும், பெரிய வெங்காயம் ரூ.85 வரையிலும் விற்கப்பட்டன. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை நிலவரப்படி சில்லறை விலையில் தக்காளி கிலோ ரூ.60 முதல் ரூ.70-க்கு விற்கப்பட்டது. முக்கிய காய்கறிகள் 10 நாள்களில் 4 முறை பெரிய அளவிலான ஏற்ற-இறக்கங்களைக் கண்டுள்ளன.

இதுகுறித்து எழும்பூரைச் சேர்ந்த சிவகாமி, கே.கே.நகரைச் சேர்ந்த பார்வதி, சிந்தாதிரிப்பேட்டையைச் சேர்ந்த லட்சுமியம்மாள் ஆகியோர் தெரிவித்த கருத்துகள்:

கோயம்பேடு சந்தையில் விற்கப்படும் காய்கறிகளின் விலை தியாகராயநகர், எழும்பூர், நுங்கம்பாக்கம், அடையாறு உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குப் பொருந்தாது. ஏனெனில், பெரும்பாலான பொதுமக்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகே உள்ள கடைகளில் மட்டுமே காய்கறிகளை வாங்க விரும்புவர்.

ஆனால், அந்தக் கடைகளில் காய்கறிகளின் விலை தற்போது தாறுமாறாக அதிகரித்துள்ளது. கடந்த வாரம் ரூ.50-க்கு விற்கப்பட்ட தக்காளி திங்கள்கிழமை (நவ.16) ரூ.100-க்கும், வெள்ளிக்கிழமை (நவ.20) ரூ.70-க்கும் விற்கப்பட்டது. ஆனால், மொத்த விலையில் இந்த அளவுக்கு ஏற்ற இறக்கங்கள் இல்லை. கோயம்பேடு சந்தைக்கு வாரம் ஒரு முறை சென்று ரூ.100-க்கு மூன்று கிலோ தக்காளியை வாங்கினால் கிட்டடத்தட்ட நான்கு, ஐந்து நாள்கள் வரை

போதுமானதாக இருக்கும். ஆனால், எங்கள் வீட்டின் அருகே உள்ள கடைகளில் சில்லறை விலையில் ஒரு கிலோ தக்காளி ரூ.70-க்கு வாங்க வேண்டியுள்ளது.

அதிக விலை உயர்வுக்குக் காரணம் என்ன? மழையால் காய்கறிகள் வரத்து இல்லை என்ற காரணத்தைக் கூறியே அவற்றின் விலையை தாறுமாறாக உயர்த்தி உள்ளனர். வாரத்துக்கு காய்கறிக்கென ரூ.200 முதல் ரூ.250 வரை செலவாகும். ஆனால், இந்த வாரம் அது ரூ.500-ஆக உயர்ந்துள்ளது. அரசின் சார்பில் பசுமைப் பண்ணை அங்காடிகளில் விற்கப்படும் காய்கறிகள் ஓரிரு மணி நேரங்களில் விற்றுத் தீர்ந்து விடுகின்றன. எனவே, கட்டுக்கடங்காத காய்கறிகளின் விலையை முறைப்படுத்த தொடர்புடைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

சில்லறை வியாபாரிகள் கருத்து: இதுகுறித்து கோயம்பேடு சின்மயா நகரைச் சேர்ந்த காய்கறி வியாபாரி பாரதி, சிந்தாதிரிப்பேட்டையைச் சேர்ந்த ரத்னவேல் ஆகியோர் கூறியது: நாங்கள் காய்கறியை அதிக விலைக்கு விற்கிறோம் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. மொத்த விலையில் ரூ.50-க்கு விற்கப்படும் தக்காளி போக்குவரத்துச் செலவு, கூலி உள்ளிட்ட காரணங்களால் சில்லறை விலையில் ரூ.70-ஆக உயர்ந்து விடுகிறது. அதையே கால் கிலோ எனும்போது ரூ.20-க்கும், அரை கிலோ என்றால் ரூ.40-க்கும் விற்கிறோம். கடந்த மாதம் தினமும் 60 கிலோ முதல் 80 கிலோ தக்காளி விற்பனையானது. அதனால் கிலோ ரூ.50-க்கு விற்கப்பட்டது. தற்போது 30 கிலோ தக்காளி கிடைப்பதே அரிதாகிவிட்டது. அதிலும் அதிக ஈரப்பதம் காரணமாக கிலோவுக்கு 100 கிராம் முதல் 200 கிராம் வரை அழுகி விடுகிறது. இறுதியில் மீதமாகும் தக்காளியை குப்பையில் கொட்டுகிறோம். கோயம்பேடு சந்தைக்கு பிற மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படும் காய்கறிகளின் வரத்து குறைந்ததால் அவற்றின் விலை அதிகரித்துள்ளது என்றனர்.

மொத்த வியாபாரிகள் கருத்து: இரு தரப்பினரின் கருத்துகள் குறித்து கோயம்பேடு மொத்த வியாபாரிகள் சௌந்தரராஜன், தியாகராஜன் ஆகியோர் கூறியது: கோயம்பேடு சந்தையில் வியாபாரிகள் நினைத்தது போல் காய்கறிகளின் விலையை உயர்த்தி விற்க முடியாது. வியஜவாடா, கர்நாடகம், ஹைதராபாத், ஆந்திரம் ஆகிய பகுதிகளில் உள்ள பெரிய காய்கறிச்

சந்தைகளில் நிலவும் விலையைப் பொருத்தே அவற்றின் விலை நிர்ணயிக்கப்படும். ஒரு லாரியில் 15 டன் காய்கறிகளை ஏற்ற முடியும். ஆந்திர மாநிலத்திலிருந்து கோயம்பேட்டுக்கு கொண்டுவர லாரி வாடகை, ஏற்றுக்கூலி என டன்னுக்கு ரூ.1,200 வரை செலவாகிறது. மழைக் காலங்களில் காய்கறிகளின் விலை வழக்கமாக அதிகரிக்கும். ஆனால், இந்த முறை தக்காளி, பெரிய வெங்காயம் உள்பட முக்கியக் காய்கறிகளின் விளைச்சல் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் அவற்றின் விலை நிலையாக இல்லாமல் அதிகளவு ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகிறது. காய்கறி விற்பனையைப் பொருத்தவரையில் எல்லா நாளும் ஒரே மாதிரியாக இருக்காது. தேவை அதிகரித்தால் விற்பனை இரு மடங்கு இருக்கும். வாங்க நபர்கள் இல்லாமல் போனால் தேக்கமடையும். எனவே, உற்பத்தி அதிகரிப்பதுடன், காய்கறிகளை சாகுபடி நிலத்திலிருந்து ஏற்றி இறக்குதற்கான சரியான சூழல்கள் இருந்தால், பொதுமக்களுக்கு காய்கறிகளைக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்வதில் எந்தத் தடையும் இருக்காது என்று தெரிவித்தனர்.

**காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ)**

| | மொத்தவிலை | சில்லறை விலை |
|---|---|---|
| தக்காளி | ரூ.45-55 | ரூ.60-70 |
| பெரிய வெங்காயம் | ரூ.40-55 | ரூ.65 |
| வெண்டைக்காய் | ரூ.35 | ரூ.50 |
| உருளைக்கிழங்கு | ரூ.20 | ரூ.38 |
| கத்தரிக்காய் | ரூ.30-45 | ரூ.55 |
| பாகற்காய் | ரூ.30 | ரூ.48 |
| கேரட் | ரூ.40 | ரூ.70 |
| பீன்ஸ் | ரூ.55 | ரூ.70 |
| அவரை | ரூ.50 | ரூ.75 |
| முருங்கைக்காய் | ரூ.60 | ரூ.90 |
| முட்டைக்கோஸ் | ரூ.15 | ரூ.32 |
| இஞ்சி | ரூ.80 | ரூ.110 |
| பீட்ரூட் | ரூ.25 | ரூ.42 |
| பச்சைமிளகாய் | ரூ.20 | ரூ.35 |

**காட்டாற்று வெள்ளம்: பாதித்தப் பகுதியில் அமைச்சர்கள் ஆய்வு**



கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தில் காட்டாற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களை 5 அமைச்சர்கள், எம்.பி., எம்எல்ஏக்கள் வெள்ளிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். காட்டுப்பாளையம் கிராமத்தில் உயிரிழந்தவர் குடும்பத்துக்கு ரூ. 4 லட்சத்துக்கான காசோலையை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வழங்கி ஆறுதல் கூறினார்.

அண்மையில் பெய்த வட கிழக்கு பருவமழையால், கடலூர் மாவட்டம் பெரும் பாதிப்பைச் சந்தித்தது. வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டப் பகுதிகளை தமிழக முதல்வரின் உத்தரவுப்படி, அமைச்சர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, நிவாரணம், மறுசீரமைப்புப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு விரைவுபடுத்தி வருகின்றனர். 10-ஆவது நாளாக வெள்ளிக்கிழமையும் இந்தப் பணி தொடர்ந்து நடைபெற்றது. பண்ருட்டி வட்டம், பெரியகாட்டுப்பாளையம் காலனி அருகில் காட்டாற்று வெள்ளத்தால் அங்கிருந்த ஓடை பாதிக்கப்பட்டது. ஓடையைச் சீரமைத்து கரையை உயர்த்தி பலப்படுத்தப்படும் பணி பொக்லைன், ரோலர், ஜேசிபி உள்ளிட்ட 18 கனரக இயந்திரங்கள் மூலமாக நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளை நிதி, பொதுப் பணித் துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதைத் தொடர்ந்து, விசூர் கிராமத்தில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை அமைச்சர்கள் சந்தித்து, பாதிப்புகள் குறித்து கேட்டறிந்தனர். விசூரில் உள்ள வெள்ளவாரி ஆற்றின் கரையைச் சீரமைத்து, உயர்த்தி பலப்படுத்தப்படும் பணி பொக்லைன் இயந்திரம் மூலம் நடைபெற்று வருவதைப் பார்வையிட்டு, ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவதற்கும் பொதுப் பணித் துறை (நீர்வள ஆதாரம்) பொறியாளர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது, மின்சாரம், மது விலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் நத்தம் இரா.விஸ்வநாதன், வணிகவரி, பதிவுத் துறை அமைச்சர் எம்.சி.சம்பத், மீன்வளத் துறை அமைச்சர் கே.ஏ.ஜெயபால், வருவாய்த் துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர் ககன்தீப் சிங் பேடி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**மழை வெள்ளமும் நீர் வீணடிப்பும்**

எங்கு பார்த்தாலும் மழை வெள்ளம்; சென்னை மிதக்கின்றது; கடலூர் மக்கள் தவிக்கின்றனர்; தமிழகம் முழுவதும் நீர் மேலாண்மை சரியான விதத்தில் இல்லாததால் ஒட்டுமொத்த தமிழகமே வெள்ளத்தில் திண்டாடுகின்றது. தமிழக நதி நீர் இணைப்புத் திட்டங்களான காவிரி - குண்டாறு நதிநீர் இணைப்புத் திட்டம், தாமிரபரணி -கருமேனியாறு - நம்பியாறு இணைப்புத் திட்டம், தென்பெண்ணை - செய்யாறு இணைப்புத் திட்டம், வெள்ளநீர் கால்வாய்த் திட்டமான தாமிரபரணி ஆறு, கருமேனி ஆறு, நம்பியாறு, பச்சையாறு, கோதையாறு, எலுமிச்சையாறு உள்ளிட்ட ஆறு நதிகளை இணைக்கும் திட்டம் ஆகிய நான்கு திட்டங்களை நிறைவேற்றியிருந்தாலே வெள்ளச் சேதாரங்களையும் தவிர்த்திருக்கலாம். வீணாகக் கடலுக்குப் போகும் நீரையும் சேமித்திருக்கலாம்.

கடந்த 12-11-2015 முதல் தொடர்ந்து பருவமழை பொழிந்து வருகிறது. மூன்று நாள்கள் தொடர் மழையில் மட்டுமே கடலூர் மாவட்டத்தில் 7.05 டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலில் கலந்துள்ளது. காவிரி உபரிநீர் மற்றும் மழை நீரைச் சேமிக்க, கரூர் மாவட்டம் மாயனூரில் தடுப்பணை கட்டியும், 1.05 டி.எம்.சி. தண்ணீரைத்தான் சேமிக்க முடிந்தது. மீதமுள்ள நீர் அணைத்தும் வீணாகக் கடலுக்குச் செல்கின்றது.

திட்டங்களை ஒழுங்குபடுத்தி இந்நீரைச் சேமித்து வைத்திருந்தால் காவிரி நதி தீரத்தில் உள்ள தென்கரை வாய்க்கால், கட்டளை மேட்டு வாய்க்கால், கிருஷ்ணராயபுரம் வாய்க்கால், புதுக்கட்டளை மேட்டுவாய்க்கால் மட்டுமல்லாமல், மேலும் ஏழு தடுப்பணைகள் கட்டி வீணாகக் கடலுக்குச் சென்ற நீரை சேமித்திருக்க முடியும்.

காவிரியில் வரும் உபரி நீரைச் சேமித்து வைத்தால் தான் எதிர்காலத் தேவைகளுக்குப் பிரச்னைகள் இல்லாமல் விவசாயப் பணிகளைச் செய்ய முடியும். காவிரி - குண்டாறு நதிகள் இணைப்புக்கு 5,500 கோடி ரூபாய் மதிப்பில் திட்டம் தயாரிக்கப்பட்டும், எந்த மேல் முயற்சிகளும் இல்லை.

அரியாறு, அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறு, வைகை, கிருதுமால் நதி மற்றும் குண்டாறு நதிகளை இணைக்கும்போது, காவிரியில் வரும் வெள்ளத்தையும், உபரி நீரையும் சேமிக்க முடியும். இதற்கு மத்திய அரசும் உதவி செய்யவில்லை, மாநில அரசும் இவ்வளவு தொகையா என்று கையை விரித்துவிட்டது.

இத்திட்டத்தைச் செயல்படுத்தி இருந்தால் குறைந்தபட்சம் 30 ஆயிரம் கன அடி நீரைச் சேமித்திருக்கலாம். இதனால் கரூர், திருச்சி, மதுரை, ராமநாதபுரம் வரையுள்ள விவசாய நிலங்கள் பயன்பெற்றிருக்கும். நீர்பெருக்கு சேமிக்கப்பட்டு, நாட்டில் வெள்ள இடர்களும் ஏற்பட்டிருக்காது.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில், தாமிரபரணி கருமேனியாறு - நம்பியாறு இணைப்பின் மூலம் 2.765 டி.எம்.சி. நீர், நான்குநேரி, திசையன்விளை, ராதாபுரம், சாத்தான்குளம், திருச்செந்தூர் பகுதிகளுக்குப் பயன்படும் வகையில் திட்டமிடப்பட்டது. இதனால் 42,012.86 ஏக்கர் புதிய பாசனப் பரப்பு உள்பட, 56,931.84 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதியும் கிடைக்கும். மேலும் இப்பகுதியில் குடிநீர் வசதியும், நிலத்தடி நீரும் உயர்வதால் ஏறக்குறைய 50 கிராமங்களுக்கு மேல் பயன்பெறும். இத்திட்டத்திற்காக 369 கோடி மதிப்பீடு செய்யப்பட்டது.

இன்றைக்குத் தாமிரபரணியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றது. குறுக்குத்துறை மிதக்கின்றது. ஸ்ரீவைகுண்டம் அணையில் 4,000 கன அடி நீர் வீணாகச் சென்று புன்னக்காயல் கழிமுகத்தில் வங்கக்கடலில் கலக்கின்றது.

தாமிரபரணி - வைகை - காவிரி - தென்பெண்ணை - பாலாறு போன்ற நதி தீரங்களில் வெள்ளக்காடாக வேடிக்கைதான் பார்க்கின்றோமே ஒழிய, அந்த வெள்ள நீரைச் சேமிக்க நம்மால் முடியவில்லையே? பண்டைக் காலத்தில் நமது முன்னோர்கள் திட்டமிட்டு எப்படி நீரைச் சேமித்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

நதிகளை தேசியமயமாக்கி, கங்கை - காவிரி - வைகை - தாமிரபரணி - குமரி மாவட்ட நெய்யாற்றுடன் இணைக்க வேண்டுமென்ற என்னுடைய உச்சநீதிமன்ற வழக்கில், எனது வாதங்களை எடுத்து வைக்கும்போது, மத்திய அரசு வழக்குரைஞர், தமிழ்நாடு அரசு மழை, வெள்ள காலத்தில் வீணாகக் கடலுக்குச் செல்லும் தண்ணீரைச் சேமித்து வைக்கலாம். அதற்கான திட்டங்களை அவர்கள் திட்டமிட்டு வகுக்கவில்லை என்று சுட்டிக்காட்டினார். அவருடைய வாதம் உண்மையாகிவிட்டதோ என்ற நிலை இன்றைக்கு கண்முன்னே தெரிகின்றது.

கேன் நதியின் உபரி நீர் பேத்வா நதியுடன் இணைக்கப்பட்டு மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் பயனடைகின்றன. ஆந்திரத்தில் கோதாவரி - கிருஷ்ணா நதிகளை இணைத்தது மட்டுமல்லாமல், கிருஷ்ணாநதி - பென்னாறு இணைக்கப்பட்டால் 6,000 கன அடி தண்ணீர் கடலுக்குச் செல்லாமல் சேமிக்கப்படும் என்றும் அம்மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் வெள்ளநீரை சேமித்து வைக்க மேற்சொன்ன நான்கு இணைப்புத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி இருந்தால் இன்றைக்கு இவ்வளவு தேவையற்ற துயரங்களை மக்கள் சந்திக்க வேண்டிய அவசியம் எழுந்திருக்காது.

நதிகள், ஆறுகள், ஏரிகள், குளங்கள், சிறு ஊரணிகள், குட்டைகள் எனப் பல வகையான நீர் நிலைகள் பண்டைய மன்னராட்சி காலத்தில் நிர்மாணிக்கப்பட்டு, அவை கவனமாக மேலாண்மை செய்து பாதுகாக்கப்பட்டது. சோழர்கள் கட்டிய வீர நாராயண ஏரி, கல்லணை என்பவற்றையெல்லாம் அக்காலத்தில் நிர்மாணித்தார்கள்.

மதுரையிலுள்ள வண்டியூர் தெப்பக்குளம், மீனாட்சி அம்மன் கோவிலிலுள்ள பொற்றாமரை குளம் என தமிழகத்தின் பல்வேறு கோயில்களில் குளங்கள்,

தெப்பங்கள் போன்றவை எப்பொழுதும் நீர் நிறைந்து இருப்பவை. அறிவியல் சார்ந்த தொழில் நுட்பத்தை கடந்த பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழினம் அறிந்திருக்கிறது என்பதையே இவையெல்லாம் காட்டுகிறது.

லட்சத்திற்கும் மேலாக இருந்த ஏரி, குளம் போன்ற நீர் நிலைகள் இன்றைக்கு 39,202-ஆக குறைந்து விட்டது. ஏரி மாவட்டமான ஒன்றுபட்ட செங்கல்பட்டு மாவட்டத்தில் பழவேற்காடு, பொன்னேரி, உத்திரமேரூர், மதுராந்தகம் ஏரி, செலவப்பன் ஏரி போன்ற பல ஏரிகள் தனது இயற்கைத் தன்மைகளை இழந்துவிட்டன.

சென்னை போரூர் ஏரியின் பரப்பு 800 ஏக்கர்களாக இருந்தது. இன்றைக்கு 330 ஏக்கராகச் சுருங்கிவிட்டது. சென்னை நகரில் மட்டும் 36 ஏரிகள் ஒரு காலத்தில் இருந்தன. புறநகர்ப் பகுதிகளில் தற்போது இருக்கும் 15 ஏரிகளின் மொத்தப் பரப்பளவு 2416.51 ஹெக்டேர். அதில் 589.02 ஹெக்டேர் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

மதுரை நகரில் 37 கண்மாய்களில் 30 கண்மாய்கள் காணாமல் போய்விட்டன. இதேப்போலத்தான் மற்ற நகரங்களிலும் ஆக்கிரமிப்புக் காரணங்களால் தமிழக நகரங்கள் மழைக் காலங்களில் வெள்ளக்காடாகக் காட்சி அளிக்கின்றன.

இந்தியாவிலேயே குளங்கள் மற்றும் ஏரிப் பாசனம் தமிழகத்தில்தான் அதிகம். வடக்கே பள்ளிப்பட்டிலிருந்து, தெற்கே பத்மநாபபுரம் வரை இருந்த பல நீர்நிலைகள் இன்றைக்கு சுயநலவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, வீட்டு மனைகளாக கபளீகரம் செய்யப்பட்டுள்ளன. இப்போது இருக்கின்ற நீர் நிலைகளையாவது பாதுகாக்க வேண்டாமா என்பதுதான் நமது வேதனை.

பழமை என்று நினைக்காமல் காலம் காலமாக தமிழகத்தில் மரபு ரீதியாக அமைந்த நீர்ப்பாசன, நீர் மேலாண்மை பற்றி அறிந்து, நவீன நடைமுறைகளோடு செயல் திட்டங்களை வகுத்து நீர் நிலைகளைப் பாதுகாக்க வேண்டும்.

ஆறுகளில் சமூக விரோதிகள் அள்ளும் மணல் கொள்ளையைத் தடுக்க வேண்டும். அள்ளும் மணலில் 80 சதவீதம் வேறு மாநிலங்களுக்கு, சுயநலவாதிகள் விற்று விடுகின்ற வேதனையான நிலைப்பாடு தற்போது உள்ளது. மீதமுள்ள 20 சதவீதம் தான் தமிழகத்திற்கு பயன்படுகிறது.

அப்பாவி விவசாயி, விவசாய நிலத்திற்கு மாட்டு வண்டியில் தற்போது

வண்டல் மண் எடுக்க முடியவில்லை. அதற்குச் சட்டம் தடை போடுகின்றது. ஆனால், மணல் கொள்ளையர்கள் லாரி லாரியாக அள்ள இன்றைக்கு சட்டம் வழி செய்கின்றது. அதுவும் கொள்ளை லாபத்தில் மணலை விற்கின்றனர். ஏரிகள், வனங்கள் ஆகியவை அவசியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று இந்திய அரசியல் சட்டப் பிரிவு 51ஏ வரையறுக்கப்பட்டும் அதை கவனிக்க மறுக்கின்றோம்.

மேற்குத் தொடர்ச்சி மலைகளிலிருந்து வரும் காட்டாற்று வெள்ளங்களிலிருந்து, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து, கோவை மாவட்டம் வரை ஆறுகள், ஓடைகள், ஏரிகள், குளங்கள், ஊரணிகள் என்று சங்கிலித் தொடராக இருந்து தண்ணீரைப் பாதுகாத்தனர். இதனால் வெள்ளங்கள் தவிர்க்கப்பட்டன. குறிப்பாக, திற்பரப்பு, பாபநாசம், மணிமுத்தாறு, குற்றாலம், ஸ்ரீவில்லிப்புத்தூர், பழனி, பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம் போன்ற இடங்களில் அருவியாகக் கொட்டும் நீரை பண்டைய காலத்தில் நம் முன்னோர்கள் நீர் நிலைகளை வெட்டி பாதுகாத்தனர். ஒரு காலத்தில், ஆயக்கட்டு விவசாயிகள் கூட்டுறவோடு, தங்கள் கிராமங்களில் உள்ள நீர் நிலைகளைத் தூர் வாரியதுண்டு. விவசாயிகள் வண்டல் மண் எடுப்பதால் குளங்களும், ஏரிகளும் தூர் வாரப்பட்டு நீரின் கொள்ளளவைக் கூட்டி, தேவையற்ற தாவரங்கள் அழிக்கப்பட்டு, தண்ணீரின் அளவு நீர் நிலைகளில் அதிகரிக்கும்; வண்டலும் விவசாயத்திற்குப் பயன்படும். இதற்கு அரசின் தடைகள் உள்ளன.

கடலூர் மாவட்டம், வாலாஜா ஏரியை அவ்வட்டார விவசாயிகளே தூர்வாரி மீட்டெடுத்துள்ளனர். நெய்வேலி என்.எல்.சி. நிறுவனமும் விவசாயிகளோடு துணை நின்று 50 ஆண்டுகளுக்குப் பிறகு வாலாஜா ஏரி உயிர்பெற உழைத்த விவசாயிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆங்கிலேயர் காலத்தில் தூர்வாரப்பட்ட நீர் நிலைகள் அதன்பின் இதுவரை முழுமையாக தூர்வாரப்படவில்லை. அப்படியே தூர்வாரினாலும் அதில் ஊழலால் சரியான பணிகள் நடப்பதில்லை.

தமிழகத்திற்கு எதிர்காலத்தில் 30-லிருந்து 50 சதவீதம் நீர்ப் பற்றாக்குறை ஏற்படும் என்று கணித்துள்ளனர். எனவே, விவசாயத்துக்கும் தண்ணீருக்கும்

தனியாக ஒரு நிதிநிலை அறிக்கையைத் தமிழக அரசு திட்டமிட்டுத் தயாரிக்க வேண்டும்.

நிலைமைகள் இப்படி இருக்கும்போது, வறட்சியின்போது மழை இல்லாமல் தவிப்பதும், மழைக் காலத்தில் வெள்ளத்தில் தத்தளிப்பதும் நமது நிலைமையாகிவிட்டது. இதைத் திட்டமிட்டு நீர் மேலாண்மை செய்தால் அண்டை மாநிலங்களுடைய உதவி இல்லாமல் நமக்குத் தேவையான நீரை நாமே பெறலாம்.

## நம்பிக்கையோடு காத்திருக்கும் மீனவர்கள்!

நம்பிக்கை, மனித வாழ்வின் அடிப்படை அம்சங்களுள் மிகவும் முக்கியமானது. காந்தியடிகள், நெல்சன் மண்டேலா, அம்பேத்கர், சுவாமி விவேகானந்தர், மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர், டாக்டர் அப்துல் கலாம், ஆங் சான் சூ கி, ஃபிடல் காஸ்ட்ரோ ஆகியோரை உலகிற்கு எடுத்துக்காட்டிய ஒளிக்கீற்று. வரலாற்றின் பக்கங்களை புரட்டிப் பார்த்தோமென்றால் நம்பிக்கையை இழந்தவர்கள் சாம்ராஜ்யத்தையே இழந்த நிகழ்வுகளையும், நம்பிக்கை கொண்டவர்கள் வெற்றிநடை போட்டதையும் அறிகிறோம். நம்பிக்கைக்குப் பல நிலைகள். பெற்றோரின் மீது குழந்தைக்கு இருக்கும் நம்பிக்கை, மாணவனின் மீதான ஆசிரியரின் நம்பிக்கை, அதே வகையில்... அரசின் கடைக்கண் பார்வைக்காக நம்பிக்கையுடன் காத்திருக்கும் மீனவர்கள். மீனவர்களின் வளர்ச்சிக்காக அரசு எடுக்கும் முயற்சிகள் ஒரு பக்கமிருந்தாலும் இன்னும் தீர்க்கப்பட வேண்டிய நியாயமான கோரிக்கைகளும் உள்ளன. சமீபத்தில் பெய்த அடைமழை காரணமாக உயிர்நீத்தவர்களின் குடும்பத்துக்கு ரூபாய் நான்கு லட்சம் அறிவித்துள்ளது அரசு. மெச்சப்பட வேண்டியதுதான். இதேபோல, கடந்த 2009-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நாட்டையே சுழன்றடித்த "பியான்' சூறாவளியில் எட்டு மீனவர்கள் மாயமானார்கள். இவர்களது பலகோடி மதிப்பிலான மீன்பிடி உபகரணங்கள் ஆழ்கடலிலே மூழ்கடிக்கப்பட்டன.

அதிவேக படகுகள், ஹெலிகாப்டர் போன்றவை மூலம் அப்போது தேடியும் இவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இருப்பினும், இம்மீனவர்களின் குடும்பங்களுக்குப் போதிய நிவாரணம் வழங்கப்படவில்லை. கரையில் ஏற்படும் மழை, புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்

வழங்கும் அரசிடம், ஆழ்கடலில் ஏற்பட்ட புயலினால் மாயமான மீனவர்களின் குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என கோருவது நியாயம் தானே?

இதைப்போன்று, ஆழ்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது தங்கள் விசைப்படகுகள் கடலில் மூழ்கியதால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களும் அரசின் உதவிக்காக காத்திருக்கின்றன.

பல லட்சங்கள் செலவு செய்து மீனவர்கள் விசைப் படகுகளைத் தயார் செய்கிறார்கள். இவர்கள் எங்கே சென்று மீன்பிடிப்பது? எந்தக் கடலில் இவர்கள் தங்கள் படகுகளை செலுத்துவார்கள்?

இவர்கள் இந்தியப் பிரஜைகள், மீனவர்கள் என்று அடையாள அட்டையில் இருந்தாலும், நமக்குத்தான் இந்தியக் கடலில் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதியில்லையே!

தமிழ்நாட்டுக்குள்ளேயே ஒரு மாவட்டத்து மீனவர், இன்னொரு மாவட்டத்துக்குச் சென்று மீன்பிடிக்க முடியவில்லை. உதாரணமாக, குமரி மாவட்டத்திலுள்ள மேற்குக் கடற்கரையைச் சார்ந்த மீனவர், தனது படகை சென்னைக்குக் கொண்டு சென்று சுதந்திரமாக மீன்பிடிக்க முடியவில்லை.

இவர் சென்னையில் மீன்பிடிக்க வேண்டுமென்றால், இவரது படகை சென்னையைச் சார்ந்த ஒருவரின் பெயருக்கு எழுதிக்கொடுக்க வேண்டும். இல்லாவிடில், அங்கே மீன்பிடிக்க முடியாது.

அதேபோல, பருவநிலைக்கு ஏற்றவாறு இவர்கள் ஆந்திரத்திற்கோ, ஒடிஸாவிற்கோ, கொல்கத்தாவிற்கோ, புதுச்சேரிக்கோ சென்றாலும் நிலைமை அதுதான்.

இவர்கள் விசைப் படகை இன்னொருவருடைய பெயருக்கு எழுதிக்கொடுத்தால் இவர்களது உரிமை இவர்தம் கையை விட்டு போய்விட்டது என்றுதானே அர்த்தம்? அதாவது, இது ஒருவகையான கொத்தடிமைத்தனம். இம்முறை நீடித்தால், மீனவர்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்படுவர். மீனவர்களின் நலன்கருதி இம்முறை ஒழிக்கப்படவேண்டும்.

இதுமட்டுமல்ல, இவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு பிடித்துவரும் மீன்களுக்கு

அங்குள்ளவர்கள் வைத்தது தான் விலை. மீறி எதுவும் பேசமுடியாது.

சுழன்றடிக்கும் சூறாவளியிலும், கடுங்குளிரிலும், சுடும் வெயிலிலும், பொழியும் மழையிலும் ஆழ்கடலையே வீடாகக்கொண்டு பல நாள்கள் தங்கியிருந்து, பல்லாயிரக்கணக்கிலான அன்னியச் செலாவணியை அதிகமாக ஈட்டித் தருகிற மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க முடியவில்லை என்பது மட்டுமல்ல, இவர்கள் அவசரத் தேவைகளுக்காக கரை ஒதுங்கவும் நிறைய கட்டுப்பாடுகள். இதனால், பல நேரங்களிலும் மீனவர்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாகிறார்கள்.

அடிக்கடி நடைபெறும் இத்தகைய விரும்பத்தகாத சம்பவங்கள் இம்மக்களின் வாழ்வுக்கு எதிராக உள்ளன. தமிழக மீனவர்கள் இந்தியாவின் எப்பகுதியிலும் சென்று சுதந்திரமாக மீன்பிடிக்கவும், தாங்கள் பிடித்த மீன்களை விற்கவும், அவசரத் தேவைகளுக்கு பிற மாநிலத்திலுள்ள துறைமுகங்களில் கரையொதுங்கவும் உரிமை வேண்டும்.

இவர்கள் வாழ்வு வளம்பெற, புதியதோர் தேசிய ஒருங்கிணைந்த மீன்பிடிக் கொள்கை தேவை. இதற்கு, மத்திய அரசு ஆவன செய்ய, தமிழக அரசு வலியுறுத்த வேண்டுமென்பது காலத்தின் கட்டாயம். இது மீனவர்களின் நம்பிக்கை கலந்த கோரிக்கை.

ஆழ்கடலில் வைத்து இறப்பது, மாயமாவது, விசைப் படகுகள் கடலில் மூழ்குவது, பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைவது போன்ற காரணங்களால் வாழ வழியில்லாத இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மீனவ குடும்பங்களின் துயர் துடைக்க, தமிழக முதல்வர் ஒரு சிறப்பு அரசாணை வெளியிட்டு, முதல்வரின் நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்க வேண்டுகிறார்கள் மீனவர்கள்.

மத்திய அரசில் மீனவர்களுக்கென்று தனி அமைச்சகம், மீனவர்களுக்கான சர்வதேச அடையாள அட்டை, கடலோர நாடுகளுடன் நல்லிணக்க ஒப்பந்தம் என மீனவர்களின் வாழ்வு அரசின் மீதான நம்பிக்கையுடன் நகர்கிறது.

## சிறு தானியங்களிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட உணவுகள் தயாரிக்கும் பயிற்சி

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறு தானியங்களிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி வரும் 24, 25 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

இந்தப் பயிற்சியில் பாரம்பரிய உணவுகள், பிழிதல், அடுமனைப் பொருள்கள், உடனடி தயார் நிலை உணவுகள் என்ற தலைப்புகளில் விளக்கம், பயிற்சிகள் வழங்கப்படும். இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் ரூ. 1,500 செலுத்தி தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். இது குறித்த மேலும் விவரங்களுக்கு பேராசிரியர், தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி, ஆராய்ச்சி நிலையம், கோவை - 3 என்ற முகவரியில் நேரிலோ, 0422-6611340, 6611268 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

பெயர்களை வரும் நவம்பர் 24-ஆம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று பல்கலைக்கழக செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**சூரியகாந்தி வரத்து குறைவு**

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு மிக குறைந்த அளவே சூரியகாந்தி விதைகள் கொண்டுவரப்பட்டிருந்தன.

வெள்ளக்கோவிலில், காங்கயம் சாலை, பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை சூரியகாந்தி விதைகள் ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும்.

வரத்து அதிகமாக இருக்கும் காலங்களில் முன்னரே அறிவிப்பு வெளியிட்டு வாரத்தில் 2 நாள்கள் ஏலம் நடத்தப்படும்.

தற்போது அறுவடைப் பருவம் இல்லாததால் கடந்த ஒரு மாத காலமாக சூரியகாந்தி விதைகள் வரத்து மிகவும் குறைந்து விட்டது. இருப்பு வைக்கப்பட்டிருக்கும் விதைகள் மட்டுமே கொண்டு வரப்படுகின்றன.

வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 76 மூட்டைகளில் 3,826 கிலோ சூரியகாந்தி விதைகளை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர்.

இதில், அதிகபட்சமாக கிலோ ரூ. 36.90-க்கும், குறைந்தபட்சமாக கிலோ ரூ. 33.09-க்கும் விற்பனையானது.

மொத்தம் ரூ. ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 964-க்கு வர்த்தகம் நடைபெற்றது.

பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் சூரியகாந்தி வரத்து அதிகரிக்கும் என விற்பனைக் கூட வட்டாரங்கள் தெரிவித்தன.

**அமராவதி அணையைத் திறக்க விவசாயிகள் கோரிக்கை**

அமராவதி அணையில் போதிய நீர் இருப்பதால் பாசனத்துக்காக அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உடுமலை வருவாய்க் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கோட்டாட்சியர் அ.சாதனைக்குறள் தலைமை வகித்தார்.

இதில், விவசாயிகள் பேசுகையில், "ஆவின் நிறுவனத்தில் விவசாயிகளிடம் இருந்து லிட்டர் ரூ. 19-க்கு பால் கொள்முதல் செய்கின்றனர். இந்த விலையை உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தென்னை வளர்ச்சி வாரியத்தில் நடைபெறும் கூட்டத்துக்கு விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை. அதிகாரிகள் இதை கவனத்தில் கொள்ளவேண்டும். மேலும், தகுதியானவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்க அரசு உத்தரவிட்டும் அரசியல் தலையீடுகளால் அவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. வடகிழக்குப் பருவ மழை நல்ல முறையில் பெய்து வருகிறது. அதனால் அமராவதி அணையில் போதிய நீர் இருப்பில் உள்ளது. ஆகவே பழைய, புதிய ஆயக்கட்டுப் பாசனத்துக்கு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடவேண்டும். மேலும், கரூர் வரையில் அமராவதி ஆற்றின் கரையோரங்களில் நடைபெறும் தண்ணீர் திருட்டைத் தடுத்து நிறுத்த வேண்டும்' என்றனர்.

விவசாயிகளின் கோரிக்கைக்கு பதிலளித்து பிஏபி அலுவலர் பேசியதாவது: நவம்பர் 25-ஆம் தேதி அணையில் இருந்து தண்ணீர் திறக்க அரசிடம் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்தக் கூட்டத்தில், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் எஸ்.ஆர்.மதுசூதனன், சிங்காரம்,லிங்கம் சின்னசாமி உள்பட பலர் பங்கேற்றுப் பேசினர்.

**பவானி, அந்தியூர் சுற்று வட்டாரத்தில் பலத்த மழை**

பவானி, அந்தியூர் மற்றும் அம்மாபேட்டை பகுதிகளில் வெள்ளிக்கிழமை விட்டுவிட்டு பலத்த மழை பெய்தது.

வடகிழக்குப் பருவமழையால் கடந்த இரு வாரங்களாக பவானி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் மழை பெய்து வந்தது. கடந்த இரு நாள்களாக காலை நேரத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை நண்பகலில் திடீரென பலத்த மழை பெய்தது. இதனால், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தொடர்ந்து சாரல் மழை பெய்தது.

இதனையடுத்து, மாலையில் இருந்து மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது. இரவும் மழை நீடித்தது.

**கால்நடை ஆய்வாளர் பணியிடங்களுக்கு பதிவு மூப்பு பட்டியல் வெளியீடு**

கால்நடை ஆய்வாளர் காலிப் பணியிடங்களுக்கு பதிவு மூப்பு பட்டியலை ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்புத் துறை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் வெள்ளிக்கிழமை விடுத்த செய்தி:

தமிழகம் முழுவதும் 271 கால்நடை ஆய்வாளர் (பயிற்சி) பணி காலியிடங்கள் உள்ளதாக கால்நடை பராமரிப்பு, மருத்துவப் பணிகள் இயக்குநர் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த காலிப் பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநர் மூலமாக மாநில அளவிலான பதிவு மூப்பு பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, பிளஸ் 2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 1.07.2014 அன்று 30 வயதுக்கு உள்பட்டவர்களாக இருக்கலாம். பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்ற தாழ்த்தப்பட்ட அருந்ததியர், எஸ்சி, எம்பிசி, பிசி, பிசி (முஸ்லீம்) ஆகிய இனத்தவர்கள் 46 வயதுக்குள் இருக்கலாம்.

இதில், எஸ்சிஏ பிரிவில் உள்ளவர்களில் 27.06.2007 வரை பதிவு செய்துள்ளவர்களும், எஸ்சி பிரிவில் 12.08.1996 வரை பதிவு செய்துள்ளவர்களும், பிசி, எம்பிசியை சேர்ந்தவர்களில் 29.12.1995 வரை பதிவு செய்தவர்களும், பிசி (முஸ்லிம்) பிரிவைச் சேர்ந்தவர்கள் 20.04.2007 வரை பதிவு செய்தவர்கள் உத்தேச பதிவு மூப்புக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். இதுதவிர முன்னுரிமை உள்ளவர்கள் இன வாரியாக, தேதி வாரியாக பதிவு செய்துள்ளவர்களின் பட்டியல் ஈரோடு சென்னிமலை

சாலையில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பொது அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டுள்ளது.

அறிவித்துள்ள கல்வித் தகுதி உள்ளவர்கள் தங்களது அனைத்து அசல் கல்விச் சான்றுகள், சாதிச் சான்று, குடும்ப அட்டை, ஆதார் அட்டை, தற்போது வரை புதுப்பிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு அடையாள அட்டை, அதன் ஆன்லைன் பிரிண்ட் அவுட் ஆகியவற்றுடன் நவம்பர் 23-ஆம் தேதி காலை 10 மணியளவில் ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துக்கு நேரில் வந்து தங்களது பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

**மூலிகை, நறுமண தாவரப் பொருள்கள் உற்பத்திக்கு ரூ. 3 கோடி வரை கடனுதவி**

தமிழகத்தில் மூலிகை, நறுமண தாவரங்கள் சார்ந்த பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழில் முனைவோருக்கு ரூ. 3 கோடி வரை கடனுதவி வழங்கப்படுவதாக, சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் முதன்மைச் செயலாளர் ஜக்மோகன் சிங் ராஜு தெரிவித்தார்.

உதகையில் தமிழக அரசின் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில், மதிப்பு கூட்டப்பட்ட தேயிலைப் பொருள்கள், மூலிகை, நறுமண தாவரங்கள் சார்ந்த பொருள்கள் உற்பத்தி வாய்ப்புகள் தொடர்பான 2 நாள் தேசிய கருத்தரங்கு வெள்ளிக்கிழமை தொடங்கியது.

இக்கருத்தரங்கை தமிழக அரசின் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் முதன்மைச் செயலாளர் ஜக்மோகன் சிங் ராஜு தொடக்கி வைத்துப் பேசியதாவது:

தேயிலை விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்டித் தரும் வகையில் ஜெரோனியம், செடிகள், புல்களை ஊடுபயிராக சாகுபடி செய்ய முன் வர வேண்டும். தேயிலையில் உள்ள பல்வேறு தாதுக்கள் வயது முதிர்வைத் தடுக்கும் என்பதை உணர்த்தி தேயிலையை குளிர் பானமாகவும், டீ ஒயினாகவும் உற்பத்தி செய்வதன் மூலமாக தேயிலைக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது.

மூலிகை, நறுமண தாவரங்கள் சார்ந்த பொருள்களை உற்பத்தி செய்ய முன்வரும் தொழில் முனைவோருக்கு ரூ. 3 கோடி வரை 75 சதவீத

மானியத்துடன் கூடிய கடனுதவியை மாநில அரசு அளிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில், தொழில் வணிகத் துறை கூடுதல் ஆணையர் ரீட்டா ஹரீஷ் தக்கர், மாவட்ட ஆட்சியர் பி.சங்கர், தேயிலை வாரிய செயல் இயக்குநர் பால்ராசு, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் ஸ்ரீனிவாச ரெட்டி, டேன் டீ மேலாண்மை இயக்குநர் ஜாப்ரி ஆகியோருடன் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அலுவலர்கள் பலர் பங்கேற்றனர்.

**பூண்டியில் 103 மி.மீ. மழை**

திருவள்ளூர் மாவட்டம், பூண்டியில் 103 மில்லி மீட்டர் மழை பெய்தது.

மாவட்டத்தில், கடந்த இரண்டு வாரங்களாக தொடர் மழை நீடித்து வருகிறது. இதில், வியாழக்கிழமை மாலை முதல் வெள்ளிக்கிழமை காலை வரை பலத்த மழை பெய்தது.

மாவட்டத்தில், அதிகபட்சமாக பூண்டியில் 103 மில்லி மீட்டர் மழையும், குறைந்தபட்சமாக பொன்னேரியில் 5 மில்லி மீட்டர் மழையும் பதிவாகியது.

மாவட்டத்தில் மழை அளவு (மில்லி மீட்டரில்): பொன்னேரி - 5, ஊத்துக்கோட்டை - 29, பள்ளிப்பட்டு - 28, கும்மிடிப்பூண்டி - 43, திருத்தணி - 78, திருவள்ளூர் - 41, பூந்தமல்லி - 101, அம்பத்தூர் - 38, பூண்டி - 103, செம்பரம்பாக்கம் - 55, சோழவரம் - 22, தாமரைப்பாக்கம் - 52, ஆர்.கே.பேட்டை - 29, திருவாலங்காடு - 27, செங்குன்றம் - 14 மில்லி மீட்டர் மழை அளவு பதிவாகியது.

தினகரன்

**மேட்டூருக்கு நீர்வரத்து சரிவு**




மேட்டூர் : காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 6,479 கனஅடியாக சரிந்தது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நேற்று முன்தினம் வினாடிக்கு 7,209 கனஅடியாக இருந்தது, நேற்று வினாடிக்கு 6,479 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு திறந்துவிடப்படும் நீரின் அளவு நேற்று முன்தினம் மாலை முதல் 300 கனஅடியில் இருந்து வினாடிக்கு 400 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. நீர்திறப்பை விட, வரத்து அதிகளவில் உள்ளதால், நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 86.18 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 86.61 அடியாக உயர்ந்தது. அணையில் நீர் இருப்பு 48.48 டிஎம்சி.

**விளைச்சல் அதிகம் ஆரஞ்சு கிலோ ரூ.20**




வேலூர் : கொடைக்கானல் ஆரஞ்சு, நாக்பூர் ஆரஞ்சு, ராஜஸ்தான் ஆரஞ்சு ஆகிய மூன்று வகைகள் மிகவும் பிரபலமானவையாகும். இதில் தற்போது மகராஷ்டிரா மாநிலம் அமராவதி பகுதிகளில் அதிகளவு மழை பொழிவு காரணமாக நாக்பூர் ஆரஞ்சு விளைச்சல் பெருவாரியாக உற்பத்தியாகியுள்ளது. இதனால் நாக்பூரில் இருந்து தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, கேரளா என்று பல மாநிலங்களுக்கு அதிகளவில் ஆரஞ்சு ஏற்றுமதியாகி வருகிறது. இதேபோல் வேலூர் மண்டிக்கு நாளொன்றுக்கு 10 டன் ஆரஞ்சு பழம் லோடு வருகிறது. இதனை பழ வியாபாரிகள் மொத்தமாக டன் கணக்கில் வாங்கிச் சென்று வேலூர் முழுவதும் கிலோ ₹ 20க்கு விற்பனை செய்து வருகின்றனர். இந்நிலையில் 2 வாரமாக வேலூரில் பெய்து வரும் தொடர் மழைகாரணமாக பழங்கள் விற்பனை மந்தமாக உள்ளது. இதனால் டன் கணக்கில் ஆரஞ்சு பழம் விற்பனையாகாமல் அழுகி வருகிறது. எனவே ரூ.20க்கு விற்றுவந்த ஆரஞ்சு பழத்தை சில இடங்களில் ₹ 10க்கு கூட விற்பனை செய்து வருகிறோம். இதனால் மக்களும் மகிழ்ச்சியாக கிலோ கணக்கில் வாங்கி செல்கின்றனர்.

**பழங்கள் வரத்து அதிகரிப்பு**

கோவை, : கோவையில் உள்ள மொத்த பழங்கள் விற்பனை நிலையங்களுக்கு தமிழகம், கேரளா உள்ளிட்ட தென் மாநிலங்களில் இருந்து பல்வேறு பழங்கள் கொண்டுவரப்படுகிறது. தற்போது மழை காரணமாக பழங்களின் வரத்து அதிகரித்துள்ளது. ஆனால், மழை காலத்தில் பொதுமக்கள் பழங்கள்

சாப்பிடுவது, பலருக்கு சளி, இருமல் தொல்லைகளை ஏற்படுத்துவதால் பழங்கள் வாங்குவதை வெகுவாக குறைத்துள்ளனர். எனினும் உக்கடத்திலுள்ள மொத்த பழங்கள் விற்பனை நிலையம் மற்றும் மேட்டுப்பாளையம் ரோட்டிலுள்ள எம்.ஜி.ஆர்.மார்க்கெட்டிற்கு பல்வேறு வகையான பழ வகைகள் வரத்து வழக்கத்தைவிட ஒரு மடங்கு அதிகரித்துள்ளது. இது தவிர கோவையிலுள்ள 7 வாழைக்காய் கமிஷன் மண்டிகளிலும் பல்வேறு ரக வாழைத்தார்கள் வரத்தும் அதிகரித்துள்ளது. இங்கு விற்பனைக்கு வரும் பழங்களை டிபார்ட்மெண்ட் ஸ்டோர் மற்றும் தள்ளுவண்டி வியாபாரிகள் ஏல முறையில் வாங்கி செல்வது வழக்கம். ஆனால் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக விற்பனை இல்லாததாலும், விரைவில் அழுகி விடுவதாலும் பழங்கள் கொள்முதல் செய்வதை வியாபாரிகள் குறைத்துள்ளனர். இதனால் மார்க்கெட்களில் பழங்களின் விலையும் முன்பைவிட பாதியாக சரிந்துள்ளது. அதற்கேற்ப சில்லரை விற்பனை நிலையங்களிலும் விலை குறைந்துள்ளது. நேற்று சில்லரை விற்பனை நிலையங்களில் விற்பனையான பழங்களின் விலை விபரம் வருமாறு (கிலோகணக்கில்) : வாழைப்பழம் பூவன் ரூ.16 முதல் ரூ.26 வரை, கதளி ரூ.28 முதல் ரூ.30 வரை, கற்பூரவள்ளி ரூ.16 முதல் ரூ.26 வரை, மோரிஸ் ரூ.10 முதல் ரூ.18 வரை, நேந்திரம் ரூ.20 முதல் ரூ.30 வரை, செவ்வாழை ரூ.28 முதல் ரூ.38 வரை. கொய்யா ரூ.30 முதல் ரூ.60 வரை, சப்போட்டா ரூ.30 முதல் ரூ.40 வரை, பப்பாளி ரூ.8 முதல் ரூ.15 வரை, மாதுளை ரூ.85 முதல் ரூ.120 வரை, திராட்சை ரூ.30 முதல் ரூ.40 வரை, ஆப்பிள் ரூ.80 முதல் ரூ.140 வரை, ஆரஞ்சு ரூ.20 முதல் ரூ.30 வரை, சாத்துக்குடி ரூ.20 முதல் ரூ.30 வரை, அன்னாசிபழம் ரூ.20 முதல் ரூ.36 வரை, சீதாப்பழம் ரூ.20 முதல் ரூ.30 வரை, முலாம்பழம் ரூ.16 முதல் ரூ.24 வரை, தர்ப்பூசணி ரூ.8 முதல் ரூ.12 வரை விற்பனையானது.

**தமிழகம், ஆந்திரா, தெலங்கானா இணைந்து நதிகளை இணைத்தால் 11000 டிஎம்சி தண்ணீரை சேமிக்க முடியும்**



சென்னை : விஐ.டி பல்கலைக்கழகம் மற்றும் நவாட் டெக் ஆகியவை சார்பில் நதிகளை இணைத்து நீர்வழிப் போக்குவரத்தை உருவாக்குதல் குறித்த 2 நாள் கருத்தரங்கம் நேற்று விஐடி பல்கலைக்கழக சென்னை வளாகத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழக வேந்தர் ஜி.விஸ்வநாதன் தலைமை தாங்கினார். நவாட் டெக் அமைப்பின் தலைவர் பேராசிரியர் ஏ.சி. காமராஜ் வரவேற்றார். வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் கருத்தரங்கத்தை தொடங்கி வைத்து பேசினார்.இந்த கருத்தரங்கத்தில் நதிகளை இணைத்து நீர்வழிப் போக்குவரத்து என்ற திட்டத்தை உருவாக்கிய நவாட் டெக் அமைப்பின் தலைவர் பேராசிரியர் ஏ.சி. காமராஜ் பேசியதாவது.

நதிகளை இணைத்தால் சாலை போக்குவரத்து மூலம் எடுத்துச் செல்லப்படும் எண்ணெய் பொருட்களை கப்பல்கள் மூலம் நீர்வழிப் போக்குவரத்தில் எடுத்துச் செல்ல முடியும். இதன் மூலம் தற்போது ஆகும் செலவில் 10 சதவீதம்தான் செலவாகும். நதிகளை இணைத்து நீரை பம்ப் செய்வதன் மூலம் 60000 மெகாவாட் மின் உற்பத்தி பெற முடியும். 60000 ஹெக்டேர் நிலத்திற்கு பாசன வசதி ஏற்படுத்த முடியும். தமிழ்நாடு, ஆந்திரா, தெலங்கானா ஆகிய மூன்று மாநிலங்கள் இணைந்து செயல்பட்டு நதிகளை இணைத்தால் தென் மாநிலங்களில் வீணாக கடலில் கலக்கும் 11000 டி.எம்.சி. தண்ணீரை சேமிக்க முடியும் என்றார். கருத்தரங்கத்திற்கு தலைமை வகித்த பல்கலைக்கழக வேந்தர் ஜி.விஸ்வநாதன் பேசியதாவது.

இந்திரா காந்திக்கு பிறகு நதிகளை இணைக்கும் திட்டத்தை யாரும் சரியான முறையில் முன்னெடுத்து செல்லவில்லை. அதில் அவர் ஆர்வமாக இருந்தார்.

இந்தியாவில் பல இடங்களில் தண்ணீர்தான் உள்ளது. ஆனால் அதில் ஒரு சொட்டு கூட குடிக்க முடியாத நிலைதான் உள்ளது. நீரின் முக்கியத்துவத்தை இப்போதுதான் நாம் உணர்ந்து இருக்கிறோம். மத்திய அரசு செயல்படுத்தும் 100 நாள் வேலைத் திட்டத்தில் ஏரிகள், குளங்களை சீரமைக்கும் திட்டத்தை சேர்க்க வேண்டும். இதில் விவசாயிகளின் ஆலோசனைகளை கேட்டுப் பெற வேண்டும். மன்னராட்சி காலத்தில் இருந்தது போன்று குடி மராமத்து முறையை செயல்படுத்தினால் நமது தண்ணீர் தேவையை நாமே பூர்த்தி செய்துக் கொள்ள முடியும் என்றார்.கருத்தரங்கத்தை தொடங்கி வைத்து வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் பேசுகையில், ‘‘அளவுக்கதிகமாக நம்மிடம் தண்ணீர் உள்ளது. ஆனால் அதை முறையாக பாதுகாக்க, அளவாக பயன்படுத்த நம்மிடம் திட்டம் இல்லை. விவசாயத்திற்கு சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்துவது அதிகரிக்கப்பட வேண்டும். இதை இன்னும் ஊக்கப்படுத்த வேண்டும். கேரளாவில் கடல் மட்டத்தை விட குறைவான உயரத்தில் உள்ள பகுதியில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. இதுபோன்ற திட்டங்களை, முயற்சிகளை நாம் தொடர்ந்து ஊக்குவிக்க வேண்டும்’’ என்றார். நேற்று மாலை நடைபெற்ற நதிநீர் இணைப்பில் அரசியல் கட்சிகளின் பங்கு என்ற தலைப்பில் அனைத்துக் கட்சியினர் கலந்துக் கொண்ட விவாத அரங்கு நடைபெற்றது.

பல்கலைக்கழக வேந்தர் ஜி.விஸ்வநாதன் தலைமை தாங்கினார். இந்திய.கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லக்கண்ணு, காங்கிரஸ் கட்சியின் கோபண்ணா, திமுக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், பாஜ மாநில தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்எல்ஏ பாலகிருஷ்ணன், மதிமுக மாநில துணை பொது செயலாளர் மல்லை சத்யா, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், பாமக சார்பில் முன்னாள் எம்பி செந்தில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மழை நிவாரண பணி மேற்கொள்ள 200 வார்டுகளில் குழுக்கள் அமைப்பு**




சென்னை: சென்னையில் மேற்கொள்ள வேண்டிய மழை நிவாரண பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் ரிப்பன் மாளிகையில் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தலைமையில் நேற்று நடந்தது. இதில் அமைச்சர்கள் வளர்மதி, கோகுல இந்திரா, மேயர், மாநகராட்சி ஆணையர், ஜெயவர்த்தன் எம்பி, எம்.எல்.ஏக்கள், மண்டலக்குழு தலைவர்கள், மாநகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் வாரிய உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். கூட்டத்தில், இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்தும், மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் விரிவாக பேசப்பட்டது. தமிழகத்தில்ல, கடந்த அக்டோபர் 28ம் தேதி முதல் நவம்பர் 16 வரை 1080 மி.மீட்டர் மழை பெய்துள்ளது என்றும், ஒரே நாளில் 512 மி.மீ மழை பெய்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. இதற்கு முன்பு 1969ம் ஆண்டு ஒரே நாளில் 279.7 மி.மீட்டர் பெய்ததும், 2005ம் ஆண்டு 222 மி.மீ மழை பெய்ததும் பெரிய அளவில் பதிவாகி இருந்தது. அதன் பின்னர் இதுவே மிக அதிக அளவில் பெய்த மழை அளவு என்றும் தெரிவித்தனர். பின்னர் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டது. கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் வேலுமணி கூறுகையில், 'சென்னையில் நிவாரண பணிகள் முழு வீச்சில் நடந்து முடிந்துள்ளன. மேற்கொண்டு பணிகள் நடப்பதற்காக 200 வார்டுகளில் 200 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு மாநகராட்சி கமிஷனர் விக்ரம் கபூர் தலைமை வகிப்பார்,' என்றார். புதிய குழாய் பதிக்க ஒதுக்கிய ரூ.1,500 கோடி என்ன ஆனது?

ரிப்பன் மாளிகையில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொண்ட மார்க்சிஸ்ட் எம்.எல்.ஏ சவுந்தரராஜன் கூறியதாவது: சென்னையில் நிவாரண பணிகள் நடைபெற்றாலும், பல இடங்களில் மழைநீர் தேங்கி நிற்கிறது. மழைநீர் வடிந்த இடங்களில் சாக்கடை நீர் தேங்கியுள்ளது. கழிவுநீரகற்றும் பணி மிக பலவீனமாக இருக்கிறது. நிவாரண பணிகளில் பாதிப்பு குறித்து கணக்கெடுக்க குழு அமைக்கப்பட்டுள்ளது. சென்னை முழுவதும் இருக்க கூடிய கழிவுநீர் குழாய்களை அகற்றி, பெரிதுபடுத்தி புதிய குழாய்கள் பதிக்க ரூ.1500 கோடி ஒதுக்கி 2 ஆண்டு ஆகிறது. அது என்ன ஆனது என்று தெரியவில்லை, என்றார்

2 நாளுக்கு பிறகு மழை குறையும்




சென்னை : இரண்டு நாட்களுக்கு பிறகு தமிழகத்தில் படிப்படியாக மழை குறையும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த ஒரு வாரமாக கொட்டித் தீர்த்த மழைக்கு பிறகு தற்போது வானம் ஒரளவு மேகமூட்டத்துடன் காணப்படுகிறது. அரபிக் கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி கடந்த 2 நாட்களாக அதே இடத்தில் நீடிக்கிறது. அதனால் தமிழகத்தில் சில இடங்களில் மழை பெய்து வருகிறது. ஆவடி, நீலகிரி 120 மிமீ, பூண்டி, பூந்தமல்லி 100 மிமீ, காட்டுப்பாக்கம், காஞ்சிபுரம், 90 மிமீ, ே◌ொகாத்தகிரி, திருமயம், சிவகிரி, திருத்தணி 80 மிமீ மழை பெய்துள்ளது.

இந்நிலையில், அரபிக் கடலில் நிலை கொண்டு இருந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி அதே இடத்தில் நீடிக்கிறது. அதனால் இரண்டு நாட்களுக்கு தமிழகத்தில் மலைப் பிரதேசங்களில் கனமழை பெய்யும். இரண்டு நாட்களுக்கு பிறகு படிப்படியாக மழை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேனி, நீலகிரி,

கோவை மாவட்டங்களில் கனமழை பெய்யும். கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களில் மழை பெய்யும். சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

வடகிழக்கு பருவமழை தீவிரம் பொள்ளாச்சியில் 70 மி.மீ மழைப்பதிவு

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதிகளில் பருவமழை தீவிரமடைந்துள்ளது. அதிகபட்சமாக நகரில் 70மி.மீ மழைப்பதிவாகியுள்ளது. பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதியில் கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதத்தில் கோடை மழையும், அதன்பிறகு ஜூன் மாதம் இறுதியில் தென்மேற்கு பருவமழையும் அடுத்தடுத்து பொழிந்தது. இந்த மழை சுமார் இரண்டு மாதமாக நீடித்தது. இதை தொடர்ந்து, வடகிழக்கு பருவமழை, பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த மாதம் இறுதியில் பொழிய துவங்கியது. சமவெளிபகுதியில் சாரலுடன் மழை பெய்தாலும், மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் தொடர்ந்து கன மழை பெய்தது. தற்போது, பொள்ளாச்சி நகர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பகல் மற்றும் இரவு நேரங்களில் சாரல் மழையும் சிலநேரங்களில் கனமழையும் அவ்வப்போது தொடர்ந்து பெய்து கொண்டிருக்கிறது. இதில், நேற்று முன்தினம் மதியம் முதல் இரவு வரை சுமார் 5 மணிநேரத்திற்கு மேல் பொழிந்த கனமழையால் ரோடுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. நள்ளிரவிலும் மழைப்பொழிவு தொடர்ந்திருந்தது. பள்ளமான பகுதிகளில் மழை நீர் தேங்கியது. கிராம பகுதிகளில் பொழிந்த மழையால் தோப்பு மற்றும் வயல்வெளிகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. நகர் மட்டுமின்றி ஆனைமலை, கோட்டூர், ஆழியார் மற்றும் நெகமம் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கனமழை பொழிவு தொடர்ந்திருந்தது. இதில் அதிகபட்சமாக பொள்ளாச்சி நகர் பகுதியில் 70 மில்லி மீட்டர் அளவில் மழைப்பதிவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மழையளவு விபரம் வருமாறு: மாக்கினாம்பட்டி(பொள்ளாச்சி) 70மி.மீ(மில்லிமீட்டரில்), நெகமம் 25மி.மீ, பரம்பிக்குளம் 7மி.மீ, ஆழியார் 9மி.மீ, மேல்நீரார் 27மி.மீ, கீழ்நீரார் 10மி.மீ, சர்க்கார்பதி 5மி.மீ,

வேட்டைக்காரன்புதூர் 3மி.மீ, அப்பர் ஆழியார் 8மி.மீ, மணக்கடவு 3மி.மீ, தூணக்கடவு 6மி.மீ, பெருவாரிபள்ளம் 7மி.மீ, கடாம்பாறை 42மி.மீ, உப்பார் 11மி.மீ, நல்லூர் 58மி.மீ, நவமலை 10மி.மீ என்ற அளவில் மழை பதிவாகியுள்ளது.

**கோவையில் இயந்திரம் மூலம் நெல் நடவு அறிமுகம்**

கோவை, : கோவை மாவட்டத்தில் சுமார் 2500 எக்டரில் நெல் பயிரிடப்படுகிறது. நெல் நடவு செய்யும் காலத்தில் கூலி ஆட்கள் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். நடவு செலவும் அதிகமாகிறது. இதனை தடுக்கும் வகையில் அரசு சார்பில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் முறையினை கோவை மாவட்டத்தில் அறிமுகம் செய்துள்ளது. இயந்திரத்தின் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. இம்முறையின் மூலம் ஒற்றை நாற்றுக்கள் மட்டுமே நடப்படுவதால் அதிக தூர்கள் பெற்று மகசூல் அதிகப்படுகிறது. பயிர்களிடையே சீரான இடைவெளி, ஆழம் மற்றும் பயிர் எண்ணிக்கையை சரியாக பராமரிக்கப்படுகிறது. இயந்திரத்தின் மூலம் நடவு செய்ய ஒரு ஏக்கருக்கு ரூ.3700 மட்டுமே செலவாகும். சாகுபடி செலவும் 25 சதவீதம் குறைகிறது. கோவை மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் ரமணமுதலிபுதூர் விவசாயிகளின் தோட்டத்தில் இயந்திர நடவு முறையை பார்வையிட்டார். அப்போது, சார்ஆட்சியர் ேரஸ்மி சித்தார்த்த ஜகடே, வேளாண்மை துணை இயக்குனர் முகம்மது இக்பால், மாவட்ட கலெக்டர் நேர்முக உதவியாளர் விஜயகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**உலக உணவு பாதுகாப்பு மையத்துடன் வேளாண்ைம பல்கலை. ஒப்பந்தம்**

கோவை, : தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், உலக உணவு பாதுகாப்பு மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. உலகளவில் 12 பல்கலைக்கழகங்கள் மற்றும் இஸ்ரேலில் உள்ள எரிமலை மையத்தின் வேளாண் ஆராய்ச்சி கழகம் இணைந்த கூட்டமைப்பான, அமெரிக்காவில் வெர்ஜீனியா மாநிலத்தில் உள்ளது உலக உணவு பாதுகாப்பு மையம். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வளரும் நாடுகளின் அறுவடை பின்சார் உணவு இழப்புகளைக் குறைக்கவும், முதுநிலை மற்றும் முனைவர்

பட்டப்படிப்பு ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உலக உணவு பாதுகாப்பு மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்.பல்கலையின் முதுகலைப்பட்டப்படிப்பு கல்வியின் முதன்மையர் மோகன் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களை அறுவடைக்குப்பின் சேமிக்கும்போது ஏற்படும் பூச்சிகளை கட்டுப்படுத்த பல புதுமையான தொழில்நுட்பங்களை உருவாக்கியதாலும், இவரது முயற்சியாலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்த மூலம் பல்கலைக்கழக மாணவர்கள் புதிய அறுவடை பின்சார் தொழில்நுட்பங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடியும் என பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மாவட்டத்தில் ஐந்து நாட்களுக்கு மழை இருக்கும்**

கோவை, : கோவை மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கும் மழை இருக்கும் என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கோவை, பொள்ளாச்சியில் கடந்த இரண்டு நாட்களாக வடக்கிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது. வானம் தொடர்ந்து மேகமூட்டத்துடன் காணப்படுகிறது. இரவு நேரங்களில் குளிர்ந்த காற்று வீசிவருகிறது. நேற்று காலையில் கவுண்டம்பாளையம், வடவள்ளி, சூலூர் உள்ளிட்ட இடங்களில் மிதமான மழை பெய்தது. உக்கடம், குனியமுத்தூர், சுந்தராபுரம் பகுதிகளில் மாலையில் மழை பெய்தது. அதிபட்சமாக வால்பாறையில் 30மி.மீ மழையும், பொள்ளாச்சியில் 29 மி.மீ, பீளமேடு 4 மி.மீ, மேட்டுப்பாளையம் 12.40 மி.மீ, பெரியநாயக்கன்பாளையம் 20 மி.மீ, சூலூர் 22.50 மி.மீ, வேளாண் பல்கலைக்கழகம் 0.40, சின்கோனா 0.40, சின்ன கல்லார் 27மி.மீ, வால்பாறை தாலூக்கா அலுவலகம் 12மி.மீ மற்றும் கோவை தெற்கு 4மி.மீ மழையும் பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் மொத்தம் 161.70 மி.மீ மழை பதிவாகியுள்ளது. சராசரியாக 13.40 மி.மீ மழை பெய்துள்ளது. வேளாண் பல்கலைக்கழக காலநிலை ஆராயச்சியாளர் பன்னீர்செல்வம் கூறுகையில் ‘‘கோவை மாவட்டத்தில் பருவமழைக்கான காரணிகள் அமைந்து விட்டன. எனவே, அடுத்த ஐந்து நாட்களுக்கு விட்டுவிட்டு மழையும், சில இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புகள் உள்ளது,’’ என்றார்.

**தக்காளி, சின்ன வெங்காயம் வரத்து சீராகவில்லை**

கோவை, : கோவையில் நாட்டு தக்காளி, சின்ன வெங்காயம் மற்றும் காய்கறிகள் வரத்து கடந்த 3 வாரமாக சீராகாததால் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கோவை மாவட்டத்தில் கிணத்துக்கடவு, தொண்டாமுத்தூர், பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் அதிளவு தக்காளி சாகுபடி நடக்கிறது. இங்கு விளையும் தக்காளியை விவசாயிகள் கோவையிலுள்ள எம்.ஜி.ஆர்., மொத்த மார்க்கெட் மற்றும் உக்கடம், குமரன் மார்க்கெட்களிலும், உழவர் சந்தைகளிலும் விற்பனை செய்கின்றனர். கோவை சுற்றுவட்டாரத்தில் கடந்த 2 வாரமாக பெய்து வரும் மழையால் தக்காளி செடிகளில் உள்ள பூக்கள் உதிர்ந்து,காய்கள் சேதமடைந்தன. இதனால் ஒரு வாரமாக தக்காளி மகசூல் குறைந்ததால் வரத்தும் குறைந்தது. இதனால் தக்காளி விலை உயர்ந்தது. கடந்த 3ம் தேதி ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் நாட்டு தக்காளி கிலோ ரூ.24 வரையும், ஆப்பிள் தக்காளி ரூ.26 வரையும் விற்றது. பின்னர் தினசரி தக்காளி வரத்து குறைந்ததால் விலை உயர துவங்கியது. கடந்த ஒரு வாரமாக நாட்டு தக்காளி மற்றும் ஆப்பிள் தக்காளி ரூ.40 வரையும் விற்கிறது. அதே போல் கோவை மாவட்டத்தில் அறுவடை செய்ய வேண்டிய சின்னவெங்காயம் மழையின் காரணமாக தற்போது தடைபட்டுள்ளது. இதனால் வரத்து குறைந்துள்ளதால் கடந்த 10 நாட்களாக சின்ன வெங்காயத்தின் விலை கிலோ ரூ.60 வரை விற்கப்படுகிறது. பெரிய வெங்காயம் விலை ரூ.40 வரை விற்கப்படுகிறது. சின்னவெங்காயம், நாட்டு தக்காளி உள்பட அனைத்து காய்கறிகளின் வரத்தும் மழையால் பெருமளவில் குறைந்துள்ளது. இதனால் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.காய்கறிகளின் நேற்றைய விலை விபரம் : கத்தரிக்காய், வெண்டை, அவரைக்காய், பச்சைமொச்சை, மாங்காய், கருணைக்கிழங்கு ரூ.50, காராமணி, சேப்பங்கிழங்கு ரூ.40, பீர்க்கங்காய், கொத்தவரங்காய், பாகற்காய், சேனைக்கிழங்கு ரூ.30, புடலை, வாழைக்காய், பச்சை மிளகாய், தேங்காய், வாழைக்காய், மரவள்ளி, சர்க்கரை வள்ளி ரூ.20, அரசாணிக்காய், பூசணிக்காய் ரூ.15, சுரைக்காய் ரூ.10.உழவர் சந்தை விலையை காட்டிலும் வெளி மார்க்கெட்டில் உள்ள டிபார்ட்மெண்ட் ஸ்டோர்கள், சில்லரை விற்பனை நிலையங்களில் கிலோவிற்கு ரூ.10 வரை விலை அதிகரித்து விற்கப்படுகிறது.


அடுத்த சில நாட்களில் வரத்து அதிகரித்தால் காய்கறிகளின் விலை குறையும் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

**இளநீர் விற்பனை சரிவு ; கடைகள் காலி**

கோவை, : கோவையிலுள்ள 100க்கு மேற்பட்ட இடங்களில் விற்பனை செய்யப்பட்டு வந்த இளநீர் கடைகள் வியாபாரம் இல்லாததால் பாதிக்கு மேற்பட்ட கடைகள் தற்காலிகமாக வியாபாரத்தை நிறுத்தியுள்ளன. கோவையில் 100க்கு மேற்பட்ட இடங்களில் சாலையோரங்களிலும், தள்ளுவண்டிகளிலும் பச்சை இளநீர், செவ்விளநீர் விற்கப்படுகிறது. கோவையில் வழக்கமாக தினசரி 25 ஆயிரம் எண்ணிக்கையிலான இளநீர் விற்பனை செய்யப்படுவது வழக்கம். கோடை வெயிலை தணிக்கவும், உடலுக்கு குளிர்ச்சி ஏற்படுத்தவும் மக்கள் இவற்றை வாங்கி சாப்பிட்டு வந்தனர். கோவையில் விற்கப்படும் இளநீர் காய்களில் பெரும்பாலானவை பொள்ளாச்சி,தொண்டாமுத்தூர் பகுதியில் இருந்து வருகிறது. இவை இனிப்பும், உப்பு சுவையும் கலந்தவையாக உள்ளதால் தாகம் தணித்து, உடலின் நீரிழப்பை ஈடுகட்டி வந்தது. மருத்துவ குணத்திற்காகவும் இளநீர்களை பொதுமக்கள் வாங்கி வந்தனர். இதனால் செவ்விளநீர் ரூ.30க்கும், பச்சை இளநீர் ரூ.25க்கும் விற்கப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த 3 வாரமாக மழை மற்றும் மேகமூட்டம் காரணமாக பொதுமக்கள் சளி, இருமல், காய்ச்சல், வாந்தி, வயிற்றுப்போக்கு ஆகிய பாதிப்பிற்கு ஆளாகி வருகின்றனர். இந்நோய் தாக்குதலுக்கு காய்ச்சிய குடிநீரை பயன்படுத்த வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துவதால் பொதுமக்கள் இளநீர் குடிப்பதை தவிர்த்துள்ளனர். இதனால் இளநீர் விற்பனை படிப்படியாக குறைந்துவிட்டது. விற்பனை இல்லாததால் கோவையில் பாதிக்கு மேற்பட்ட இடங்களில் உள்ள இளநீர் கடைகள் தற்காலிகமாக விற்பனையை நிறுத்தியுள்ளன. சில இடங்களில் இளநீர் விலை ரூ.20 என்று போர்டு வைத்தும் எதிர்பார்த்த வியாபாரம் இல்லை. மீண்டும் வெயில் நாள்முழுவதும் அடித்து சீதோஷ்ண நிலை இயல்புக்கு திரும்பிய பின்னர் இளநீர் விற்பனை அதிகரிக்கும் என்கின்றனர் வியாபாரிகள்.

தி இந்து
தமிழால் இணைவோம்

# புதிய தொழில் நுட்பங்களை தெரிந்து கொள்ள வேண்டும்: வேளாண் உற்பத்தியை அதிகரிக்க இஸ்ரேல் துணைத் தூதர் அறிவுரை



இந்த மையத்தின் செயல்பாடு கள் குறித்து இஸ்ரேல் துணைத் தூதர் டவ்செகவ் ஸ்டீன்பெர்க் நேற்று ஆய்வு செய்தார்.

வேளாண் உற்பத்தியை அதிக ரிக்க விவசாயிகள் புதிய தொழில் நுட்பங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என இந்தியாவுக்கான இஸ்ரேல் துணைத் தூதர் டவ்செகவ் ஸ்டீன்பெர்க் தெரிவித்தார்.

இஸ்ரேலியத் தொழில்நுட்பத் தைப் பயன்படுத்தி, இந்தியாவில் வேளாண் உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக காய்கறி, மலர், மாங்காய், எலு மிச்சை உள்ளிட்ட பயிர் சாகுபடி களுக்கு என பல்வேறு மாநிலங் களில் 29 மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

தமிழகத்தில் இஸ்ரேலிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, மலர் சாகுபடியை அதிகரிக்க தளி யில் ஒரு மையம் அமைக்கப் பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரத்தில் காய்கறி சாகுபடியை அதிகரிக்க காய்கறி மகத்துவமையம் அமைக்கப்பட்டுள் ளது. இந்த மையத்தில் மாதிரி வயல்களை அமைத்து இஸ்ரே லியத் தொழில்நுட்பத்தை பயன் படுத்தி தக்காளி, மிளகாய், வெண்டை, கத்தரி உள்ளிட்ட காய் கறிகளை பயிரிட்டுள்ளனர்.

இந்த மையத்தின் செயல்பாடு கள் குறித்து இஸ்ரேல் துணைத் தூதர் டவ்செகவ் ஸ்டீன்பெர்க் நேற்று ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறும்போது, காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிக்க தரமான விதைகளைத் தயார் செய்து விவசாயிகளிடம் கொடுக்கவும், விவசாயிகளிடம் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப் படுத்தவும் இந்த மையம் உதவும்.

சொட்டுநீர்ப் பாசனம், பாலி ஹவுஸ், நிலப்போர்வை ஆகி யவை அமைப்பதன் மூலம், காய் கறி உற்பத்தியை அதிகரிக்க முடியும். இஸ்ரேல் தூதரகம் மூலம் நடத்தப்படும் கருத்தரங்குகளில் விவசாய அதிகாரிகள் பங்கேற்று புதிய தொழில்நுட்பங்கள் குறித்து தெரிந்துகொள்ள வேண்டும். அதை விவசாயிகளுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

தரமான விதைகளை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்கு வதன் மூலம் காய்கறி உற்பத்தி பெருகும்.

தரமான காய்கறிகளை விற்பனை செய்வதன் மூலம் அதிக விலையும் கிடைக்கும். இதன் மூலம் விவசாயிகளின் பொருளாதாரமும் உயரும் என்றார்.

ஆய்வின் போது தோட்டக் கலைத்துறை மாநில இணை இயக்குநர் ராஜாமுகமது, காய்கறி மகத்துவ மைய திட்ட அலுவலர் சீனிவாசன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கார்த் திகேயன், மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் ராம நாதன் உடன் இருந்தனர்._

## இஸ்ரேல் தூதருக்கு பலத்த பாதுகாப்பு

திண்டுக்கல் மாவட்டத்துக்கு இஸ்ரேல் துணைத் தூதர் வருகையையொட்டி பலத்த பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நான்கு வாகனங்களில் போலீஸார் பைலட் பாதுகாப்புடன் மதுரையில் இருந்து உடன் வந்தனர். காய்கறி மகத்துவமையம் அமைந்த பகுதிக்குள் பத்திரிகையாளர்கள், அலுவலர்கள் அனைவரும் முழு சோதனைக்குப் பின்னரே அனுமதிக்கப்பட்டனர். மையத்தைச் சுற்றிலும் போலீஸார் துப்பாக்கியுடன் நின்று கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர். மெட்டல் டிடெக்டர் உள்ளிட்ட கருவிகளை பயன்படுத்தி, துணைத் தூதர் வருவதற்கு முன்பே போலீஸார் தீவிர சோதனை நடத்தினர். டிஎஸ்பி செல்வம் தலைமையில் போலீஸார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

வனத்துறை பணியாளர் தேர்வு மதிப்பெண் வெளியீடு

தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

வனவர், கள உதவியாளர் பதவிகளுக்கான எழுத்துத் தேர்வு தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் கடந்த 22.2.2015 அன்று நடத்தப்பட்டது. தேர்வின் வினாக்களுக்கான இறுதி விடைகளும், தேர்வெழுதிய விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்களும் வனத் துறையின் இணையதளத்தில் (www.forests.tn.nic.in) வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கால்வாய்கள் மூலம் அதிக நீர்வரத்து: போரூர் ஏரி முழுமையாக நிரம்பியது



சென்னை மற்றும் சுற்று வட்டாரங்களில் கடந்த சில நாட்களாகக் கன மழை பெய்தது. இதனால் சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரமான புழல் ஏரிக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. மேலும் பூண்டி மற்றும் சோழவரம் ஏரிகளில் இருந்தும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. சென்னை இன்னும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பாத நிலையில் நேற்று நீலவண்ணத்துடன் காட்சியளித்த வானத்தின் பின்னணியில் பரந்து விரிந்து காணப்படும் புழல் ஏரி. படம்: ம.பிரபு

போரூர் ஏரி நிரம்பியதைத் தொடர்ந்து சாலையை துண்டித்து உபரி நீர் வெளியேற்றப்பட்டு வரு கிறது. இதனால், மவுலிவாக்கம்- மாங்காடு இடையே போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள போரூர் ஏரி, சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் முக்கிய மானது. சுமார் 822 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ஏரி, பல்வேறு ஆக்கிரமிப்புகளால் தற்போது 200 ஏக்கராக சுருங்கி உள்ளது. தற்போது, 12 அடி உயரம் கொண்ட போரூர் ஏரியின் முழு கொள்ளளவு 46 மில்லியன் கன அடி. திருவள்ளூர் மாவட்டத்தில் பொழிந்து வரும்

கனமழையால், போரூர் ஏரியை சுற்றியுள்ள நீர் நிலைகள் நிரம்பி, வரத்துக்கால்வாய்கள் மூலம் போரூர் ஏரிக்கு அதிகளவில் மழை நீர் வருகிறது.

மதனந்தபுரம், விக்னேஷ்வரா நகர் பகுதியில் கரை பலவீனமாக இருப்பதால், அதனை பலப்படுத் தும் பணியில் கடந்த சில நாட் களுக்கு முன் பொதுப்பணித் துறை அதிகாரிகள் ஈடுபட்டனர். 8 ஆயிரம் மணல் மூட்டைகள் மூலம் போரூர் ஏரியின் கரை பகுதி பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 15-ம் தேதி மாலை ஏரி முழுகொள்ளளவை எட்டியது. நேற்று முன் தினம் பெய்த மழையால் ஏரிக்கு வினா டிக்கு 400 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இதையடுத்து, ஏரியிலிருந்து உபரி நீரை வெளி யேற்ற மாவட்ட நிர்வாகம் முடிவு செய்தது. ஆனால், போரூர் ஏரியி லிருந்து உபரி நீர் வெளியேறு வதற்கு, உரிய வழியில்லை.

இதனால், மவுலிவாக்கம் மாங் காடு சாலையில், பரணிபுத்தூர் பாலம் அருகில் சாலை துண்டிக் கப்பட்டது. அதன்வழியாக உபரி நீரை பொதுப்பணித்துறையினர் வெளியேற்றி வருகின்றனர். இதன்படி, வினாடிக்கு 400 கனஅடி நீர் வெளியேறி வருகிறது.

இதனால், மவுலிவாக்கம் மாங்காடு இடையே போக்குவரத்து முழுமையாக துண்டிக்கப்பட்டது. அந்த வழியில் சென்று வந்த வாகனங்கள் அய்யப்பன்தாங்கல் வழியாக சுற்றிச் சென்று வருகின்றன._

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



மேட்டூர், நவ. 21–

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் தற்போது மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் வினாடிக்கு 7 ஆயிரத்து 709 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு 6 ஆயிரத்து 479 கன அடியாக குறைந்தது.

இந்த நிலையில் இன்று காலை நீர்வரத்து 9 ஆயிரத்து 199 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனம் மற்றும் கால்வாய் பாசனத்திற்காக 900 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

அணையின் நீர்மட்டம் 86.58 அடியில் இருந்து 87.25 அடியாக உயர்ந்துள்ளது. நீர் திறப்பைவிட நீர்வரத்து அதிகமாக உள்ளதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

**நெல்லை மாவட்டத்தில் பலத்த மழை காரணமாக 5 அணைகள் நிரம்பியது**



நெல்லை, நவ. 21–

நெல்லை மாவட்டத்தில் பலத்த மழை காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பிரதான அணையான பாபநாசம் அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

இன்று பாபநாசம் அணைக்கு வினாடிக்கு 676.39 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால் அணையின் நீர்மட்டம் நேற்றை விட 1 அடி உயர்ந்து இன்று 102.50 அடியாக உள்ளது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் நேற்றில் இருந்து 2 அடி உயர்ந்து இன்று 121.03 அடியாக உள்ளது.

தாமிரபரணி ஆற்றில் மழை நீர் வெள்ளமாக வருவதால் பாபநாசம் அணை மூடப்பட்டுள்ளது. மணிமுத்தாறு அணைக்கு வினாடிக்கு 403 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால் 1 அடி உயர்ந்து இன்று 78.15 அடியாக உள்ளது. நெல்லை மாவட்டத்தில் பெய்த கன மழை காரணமாக ஏற்கனவே குண்டாறு, கடனாநதி, ராமநதி, கருப்பாநதி ஆகியவை ஏற்கனவே நிரம்பிவிட்டன. இந்த அணைகளுக்கு வரும் தண்ணீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது. இந்த நிலையில் நேற்று இரவு நம்பியாறு அணையும் முழு கொள்ளளவான 23.50 அடியை எட்டியது. அணைக்கு வரும் 510 கன அடி தண்ணீரும் அப்படியே திறந்து விடப்படுகிறது. இதனால் நம்பியாறு பகுதியில் தண்ணீர் வெள்ளமாக பாய்ந்து செல்கிறது. நெல்லை மாவட்டத்தில் உள்ள 11 அணைகளில் இதுவரை 5 அணைகள் நிரம்பி விட்டன. மேலும் அடவிநயினார் அணை, கொடுமுடியாறு, வடக்கு பச்சையாறு ஆகிய 3 அணைகள் நிரம்பும்

தருவாயில் உள்ளன. இந்த அணைகள் இன்னும் 2 நாட்களில் நிரம்பி விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



மேட்டூர், நவ. 21–

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் தற்போது மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் வினாடிக்கு 7 ஆயிரத்து 709 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு 6 ஆயிரத்து 479 கன அடியாக குறைந்தது.

இந்த நிலையில் இன்று காலை நீர்வரத்து 9 ஆயிரத்து 199 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனம் மற்றும் கால்வாய் பாசனத்திற்காக 900 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

அணையின் நீர்மட்டம் 86.58 அடியில் இருந்து 87.25 அடியாக உயர்ந்துள்ளது. நீர் திறப்பைவிட நீர்வரத்து அதிகமாக உள்ளதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## வேலூரில் இடி–மின்னலுடன் விடிய விடிய மழை



வேலூர், நவ.21–

வேலூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் விடிய விடிய பலத்த மழை பெய்தது.

வேலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இந்த மழை காரணமாக மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான ஏரிகள், நீர் நிலைகள் நிரம்பியுள்ளன.

பல ஆண்டுகளுக்கு பிறகு வேலூர் பாலாற்றில் வெள்ளம் கரை புரண்டோடுகிறது. தொடர் மழை காரணமாக தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்தது. ஏராளமான வீடுகள் இடிந்தன. உயிர் இழப்புகளும் ஏற்பட்டன.

இந்த மழை வேலூரில் குறைந்தபாடில்லை. கடந்த 2 நாட்களாக பகல் நேரத்தில் அவ்வப்போது வெயில் அடித்தாலும் திடீரென மேகங்கள் திரண்டு மழை பெய்து வருகிறது. இதனால் வேலூரில் குளிர்ச்சியான சூழ்நிலை நிலவுகிறது.

நேற்று இரவும் வேலூரில் மழையின் தாக்கம் இருந்தது. மாலை 6 மணியளவில் மேகங்கள் சூழ்ந்தன. சிறிது நேரத்தில் பலத்த மழை பெய்தது.

இடி–மின்னலுடன் பெய்த இந்த மழையால் சாலைகளிலும், தெருக்களிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பல இடங்களில் போக்குவரத்து பாதிப்பும் ஏற்பட்டது.

இந்த மழை இரவு நேரத்திலும் தொடர்ந்தது. அவ்வப்போது லேசான தூரலும், பலத்த மழையும் பெய்தது.

விடிய விடிய பெய்த இந்த மழையால் வேலூர் மக்கள் குளிர்ச்சியில் இதமான கால சூழ்நிலையை அனுபவித்தார்கள்.

இன்று காலை 7 மணி அளவிலும் வேலூரில் மழை பெய்தது. அந்த மழை சுமார் 15 நிமிடம் நீடித்தது. வேலூரை போன்று மாவட்டத்தின் மற்ற சில பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

மாவட்டம் முழுவதும் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

வேலூர் – 51, மேல் ஆலத்தூர் – 23.6, வாணியம்பாடி – 22.6, குடியாத்தம் – 22.6, ஆலங்காயம்– 16.2, ஆம்பூர் – 12.2, காவேரிபாக்கம் – 5.2, வாலாஜா – 4.2, திருப்பத்தூர் – 2.1.

**மழையில் பூக்கள் உதிர்ந்ததால் முருங்கைக்காய் விளைச்சல் குறைந்து**



சென்னை,

தொடர் மழை காரணமாக முருங்கை மரத்தில் பூக்கள் உதிர்ந்து விளைச்சல் குறைந்ததால் முருங்கைக்காய் விலை கிலோ 80 ரூபாய்க்கு உயர்ந்தது.

முருங்கைக்காய் கிலோ ரூ.80

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் மழை காரணமாக விவசாய நிலங்கள் நீரில் மூழ்கி பயிர்கள் சேதம் அடைந்துள்ளன. முருங்கைக்காய் சாகுபடி நடைபெறும் ஒட்டன்சத்திரம், ராதாபுரம், தேனி போன்ற பகுதிகளில் மழையால் முருங்கை மரங்களில் உள்ள பூக்கள் உதிர்ந்து முருங்கைக்காய் விளைச்சல் குறைந்தது.

இதனால் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வரும் முருங்கைக்காயின் வரத்து குறைந்து விலை உயர்ந்தது. முருங்கைக்காய் கிலோ 70 ரூபாய் முதல் 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

காய்கறி வரத்து குறைந்தது

ஆந்திராவில் கனமழை பெய்து வருவதால் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு காய்கறிகளின் வரத்து குறைந்து விலை சற்று அதிகமானது. பீன்ஸ் ஒரு கிலோ 70 ரூபாய்க்கும், கேரட் கிலோ 50 ரூபாய்க்கும், தக்காளி 40 ரூபாய் முதல் 50 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.கத்தரிக்காய் கிலோ 30 முதல் 50 ரூபாய்க்கும், வெண்டைக்காய் கிலோ 40 ரூபாய்க்கும், பச்சை மிளகாய் கிலோ 25 முதல் 30 ரூபாய்க்கும், பாகற்காய் கிலோ 40 ரூபாய்க்கும், சேனை கிலோ 40 ரூபாய்க்கும், உருளைகிழங்கு கிலோ 25 ரூபாய்க்கும், பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம் தலா கிலோ 50 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கட்டு கொத்தமல்லி 20 ரூபாய்க்கும், கீரை கட்டுகள் 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

**செவ்வாய்க்கிழமை முதல் மழை, படிப்படியாக குறையும் வானிலை மையம் தகவல்**



சென்னை,

செவ்வாய்க்கிழமை முதல் மழை படிப்படியாக குறையும் என்று வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

வடகிழக்கு பருவமழை

வடகிழக்கு பருவமழை தமிழ்நாட்டில் தீவிரம் அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் வடமாவட்டங்களில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த மழையால் ஆயிரக்கணக்கான வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இந்த நிலையில் தென்மாவட்டங்களிலும் மழை பெய்து வருகிறது.இன்று கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்யும் என்றும், உள் மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும் என்றும் வானிலை மையம் அறிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:-

கடலோர மாவட்டங்களில் மழை

நேற்று முன்தினம் லட்சத்தீவில் நிலைகொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே இடத்தில் நீடிக்கிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் அநேக இடங்களில் மழை பெய்துள்ளது. பதிவு செய்த மழையின்

அடிப்படையில் நீலகிரி மாவட்டம் குன்னூரில் 13 செ.மீ. மழை பெய்துள்ளது. லட்சத்தீவில் நிலைகொண்டிருக்கும் குறைந்த காற்றழுத்தம் காரணமாக தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும். உள்மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும். மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் குன்னூர், கோவை, வால்பாறை, தேனி உள்ளிட்ட இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

செவ்வாய்க்கிழமை முதல் மழை குறையும்

தமிழ்நாட்டில் வரும் செவ்வாய்க்கிழமை முதல் மழையின் அளவு படிப்படியாக குறையும்.

வடகிழக்கு பருவமழை காலத்தில் அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் டிசம்பர் 31-ந் தேதி வரைக்குள் பெய்ய வேண்டிய சராசரி மழை 44 செ.மீ. ஆகும். ஆனால் இதுவரை 39.6 செ.மீ. மழை பெய்துள்ளது. எனவே விரைவில் சராசரி அளவை எட்டிவிடும்.இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

14 செ.மீ. மழை

குன்னூர் 14 செ.மீ., ஆவடி, கேத்தி தலா 12 செ.மீ., பூண்டி, பூந்தமல்லி தலா 10 செ.மீ., காட்டுக்குப்பம் 9 செ.மீ., கோத்தகிரி, திருமயம், சிவகிரி, திருத்தணி 8 செ.மீ., குந்தாபாலம், திருமங்கலம், பெரியகுளம், புதுச்சேரி, தம்மம்பட்டி தலா 7 செ.மீ.,

தேவகோட்டை, கூடலூர், காவேரிப்பாக்கம் தலா 7 செ.மீ., பெரியாறு, செம்பரம்பாக்கம், தாமரைப்பாக்கம், ராஜபாளையம், இலுப்பூர், அரிமளம் தலா 6 செ.மீ., ஸ்ரீபெரும்புதூர், மேலணைக்கட்டு, வெம்பாவூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, குடவாசல், திருப்புவனம், செங்கல்பட்டு, ஊட்டி, சென்னை விமானநிலையம், நடுவட்டம் தலா 4 செ.மீ. மழை பெய்துள்ளது.

நுங்கம்பாக்கம்

மேலும் சென்னை நுங்கம்பாக்கம் உள்பட பல இடங்களில் தலா 3 செ.மீ. மழை

பதிவாகி உள்ளது. இதுதவிர 70-க்கும் மேற்பட்ட இடங்களில் மழை குறைந்த அளவு பதிவாகி உள்ளது.

## சென்னையில் மீண்டும் பலத்த மழை



சென்னை

சென்னையில் கடந்த சில நாட்களாக மழை சற்று குறைந்திருந்த நிலையில் புரசைவாக்கம், நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம், கே.கே.நகர், பாரிமுனை, அசோக்நகர், புதுப்பேட்டை, அண்ணாசாலை உள்ளிட்ட நகரின் பல்வேறு பகுதிகளில் நேற்று மாலை 6 மணி முதல் பலத்த மழை பெய்யத் தொடங்கியது. அவ்வப்போது விட்டுவிட்டு பெய்த இந்த மழை இரவு 9 மணிக்கு பின்பும் நீடித்தது. மேற்கு மாம்பலம், ஆலந்தூர், பரங்கிமலை, மீனம்பாக்கம் ஆகிய இடங்களிலும் மழை பெய்தது.இதேபோல் திருநின்றவூர், பட்டாபிராம், ஆவடி, திருமுல்லைவாயல், அம்பத்தூர், கொரட்டூர், அயப்பாக்கம், கோயில்பதாகை உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளிலும் நேற்று இரவு இடி மின்னலுடன் பலத்த மழை கொட்டியது.இதனால் ஆவடி வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, வசந்தம்

நகர், திருநின்றவூர் சுதேசி நகர், முத்தமிழ்நகர், பெரியார் நகர், பட்டாபிராம் கோபாலபுரம், வள்ளலார் நகர் உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் மீண்டும் மழை நீர் அதிகரிக்க தொடங்கியது. இதனால் பொதுமக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாயினர்.

திருநின்றவூர் அருகே சி.டி.எச். சாலையில் மழை நீர் தேங்கியதால் ஒரு வழிப் பாதையில் வாகனங்கள் சென்றன. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

## கனமழை எதிரொலி: பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு கரையோர பகுதி மக்களுக்கு எச்சரிக்கை



மேட்டுப்பாளையம்

நீலகிரி மாவட்டத்தில் கனமழை பெய்து வருவதால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள் ளது. இதனால் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ளஅபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

பில்லூர் அணை

கோவை மாவட்டம் காரமடை அருகே மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியில் இயற்கை எழில் சூழ்ந்த பகுதியில் பில்லூர் அணை உள்ளது. இந்த அணையின் மொத்த கொள்ளளவு 100 அடி ஆகும். இந்த அணையில் 4 மதகுகள் உள்ளன. தமிழகத்தில் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கேரள மாநிலம் மற்றும் நீலகிரி, பில்லூர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்தது. இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. நேற்று முன்தினம் காலை 11 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 87½ அடியாக இருந்தது. விடிய விடிய பெய்த கன மழை காரணமாக நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு 12 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து 6 ஆயிரம் கனஅடி தண்ணீர் உபரிநீராக வெளியேற்றப்பட்டது.

'கிடுகிடு' உயர்வு

இதைதொடர்ந்து அணையின் நீர்மட்டம் 'கிடுகிடு'வென உயர்ந்து 94 அடியை எட்டியது. இந்த நிலையில் தொடர் மழை மற்றும் அணையில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீர் காரணமாக மேட்டுப் பாளையம் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. இதனால் பவானி அம்மன் கோவில் மற்றும் விளையாட்டு மாரியம்மன் கோவில்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. மேலும் கரையோர பகுதியில் உள்ள வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் மக்கள் பாதிக்கும் அபாய நிலை ஏற்பட்டு உள்ளது. இதற்கிடையே நேற்று காலை 11 மணி அளவில் அணைக்கு 6 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது. மழை மற்றும் நீர் வரத்து குறைந்ததால் அணையின் நீர்மட்டத்தை சீராக வைத்திருக்க 6 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.இந்தநிலையில் மாவட்ட கலெக்டர் உத்தரவின் பேரில் தாசில்தார் பாபுராபர்ட் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

ஒத்துழைக்க வேண்டும்

நீலகிரி மற்றும் பில்லூர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் பில்லூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

6 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றப் படுகிறது. இந்த நிலையில் தொடர் மழை காரணமாக பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. இதையடுத்து தேக்கம்பட்டி, நெல்லித்துறை, மேட்டுப்பாளையம், ஆலாங்கொம்பு, சிறுமுகை போன்ற பகுதிகளில் ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் மக்கள் தங்களின் உடைமைகளை எடுத்து கொண்டு பாதுகாப்பான பகுதிக்கு செல்ல வேண்டும். அரசின் நடவடிக்கைக்கு ஒத்துழைத்து உயிர்சேதத்தை தவிர்க்க வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது.

## கடலூர் மாவட்டத்தில் மீண்டும் மழை



கடலூர்

கடலூர் மாவட்டத்தில் நேற்று மீண்டும் மழை பெய்தது. அதிகபட்சமாக வானமாதேவியில் 49 மி.மீ. மழை பதிவானது.

மீண்டும் மழை

கடலூர் மாவட்டத்தில் கடந்த 9–ந்தேதி பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டும், வீடுகள் இடிந்து விழுந்ததிலும் 60–க்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். நூற்றுக்கணக்கான கால்நடைகளும் வெள்ளத்தில் பலியாயின, பல்லாயிரம் ஹெக்டேர் விளைநிலங்களும் வெள்ளத்தில் மூழ்கின. இதனால் ஏற்பட்ட சேதத்தை கணக்கிடும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் நிவாரணப்பணிகளும் முழுவீச்சில் அமைச்சர்கள் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் கடந்த 4 நாட்களாக மழைவிட்டு வெயில் அடித்தது. இதனால் மக்கள் ஓரளவு நிம்மதி பெருமூச்சு விட்டனர்.

இந்த சூழ்நிலையில் புதிதாக உருவாகி உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக கடலூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் மீண்டும் மழை பெய்து வருகிறது. கடலூரை பொறுத்தவரையில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை மழைவிட்டு, விட்டு பெய்து கொண்டே இருந்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் மீண்டும் தேங்கியுள்ளது. இதேபோல் விருத்தாசலம், திட்டக்குடி, நெய்வேலி, சிதம்பரம் என்று மாவட்டத்தில் ஏனைய பகுதிகளிலும் நல்ல மழை பெய்தது.

<u>மழை அளவு</u>

மாவட்டத்தில் நேற்று காலை 8–30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் அதிகபட்சமாக வானமாதேவியில் 49 மி.மீ. மழை பெய்தது. இதர பகுதிகளில் பெய்த மழை அளவு விவரம்(மி.மீட்டரில்) வருமாறு:–

கீழச்செருவாய் 40, பண்ருட்டி 38,80, வேப்பூர் 26, சிதம்பரம் 24, பரங்கிப்பேட்டை 19, கடலூர் 13.50, சேத்தியாத்தோப்பு 13, கொத்தவாச்சேரி 10, பெலாந்துறை 9.30, தொழுதூர் 9, புவனகிரி 8, அண்ணாமலைநகர் 7.60, மே.மாத்தூர் 7, லக்கூர் 6.20, குப்பநத்தம் 5, லால்பேட்டை 3, காட்டுமன்னார்கோவில் 2.30.